உண்மைநியதிகளில் நுகர்வு 6.7 சதவீதத்தாலும், மூலதன ஆக்கம் 25 சத வீதத்தாலும் அதிகரித்தன. இது 1979இல் முறையே 9 சதவீத, 20 சதவீத அதி கரிப்புகளுடன் ஒப்பிடத்தக்கது. 1980இல் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவானது 1979இல் அதே அளவாகவே காணப்பட்டது. உண்மையான ஏற்றுமதிகள் சிறி தளவான அதிகரிப்பையே காட்டிநின்றன.

தற்போதைய மதிப்பீடுகளின்படி சேமிப்புக்கள் 1979இன் ரூ. 69,780 இலட் சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 91,870 இலட்சமாக அமைந்து 32 சதவீத அதிகரிப் பைக் கொண்டிருந்தது. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேமிப்பின் விகிதம் ஏறக்குறைய 13.5 சதவீதமாக அமைந்து 1979ஆம் ஆண்டினையே ஒத் திருந்தது. பணவீக்கத்தாக்கங்கள் நிலவியபோதும் சேமிப்புக்களின் பங்கு வீழ்ச்சி யடையவில்லை என்பதற்கு இது மேலும் சான்ருக உள்ளது.

அட்டவணை 1.7

**சேமிப்புகள்**

ப. இ. ரூபாய்களில்

| விடயம் | 1978 | 1979 | 1980 |
|---|---|---|---|
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 42,428 | 52,147 | 68,271 |
| 2. வெளிநாட்டு மூலவளங்கள் (பொருட்கள் பணிகள் ஆகியவற்றின் இறக்குமதி நீங்கலாக) ... | 2,274 | 6,549 | 15,279 |
| 3. முதலீடு ... ... ... | 8,554 | 13,527 | 24,466 |
| 4. சேமிப்பு (3-2) ... ... | 6,280 | 6,978 | 9,187 |
| 5. சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 4) ... | 14.8 | 13.4 | 13.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## வேளாண்மை

1980ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நெற்றுணைத்துறை தவிர்ந்த வேளாண் மைத்துறையின் செயலாற்றம் மீண்டும் எதிர்பார்ப்புக்களுக்குக் குறைவாகவே இருந்தது. 1980ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தி 1979ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 2.0 சதவீதத்திற்கெதிராக 2.9 சதவீதம் கொண்ட ஓரளவு திருந்திய வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது. 1978, 1977 ஆம் ஆண்டுகளுக்கு இது தொடர் பான வீதங்கள் முறையே 4 சதவீதமாகவும், 7 சதவீதமாகவும் இருந்தன. 1979, 1980 ஆம் ஆண்டுகளுக்கான வளர்ச்சி வீதங்கள் குடித்தொகை அதிகரிப்புக்காகச் சீராக்கம் செய்யப்படின் அதனல் பெறப்படும் தலைக்குரிய வளர்ச்சி வீதங்கள் மனநிறைவுக்குரியனவாக அமையவில்லை. மரப்பயிர்த்துணைத்துறையின் உற்பத்தி வீழ்ச்சியடைந்து ஏற்றுமதிக்கான மிகைக்கிடைப்பனவைக் குறைத்தது. 1980இல் தேயிலை உற்பத்தி 7.3 சதவீதத்தால்[1] வீழ்ச்சியடைந்தவேளையில் இறப்பர் உற்

1. 1980 ஆம் ஆண்டில் முதலீடுகளின் ஏற்றுமதிகள் 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. அண்மைக் காலத்தில் சுங்கத்தால் தேயிலை ஏற்றுமதிகள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட அளவுகள் பெறப் பட்ட உற்பத்தி, மதிப்பிடப்பட்ட உற்பத்தி, இருப்புக்களின் மாற்றங்கள் இவற்றுடன் நோக்கின் ஏற்று மதி செய்யப்படக்கூடியதிலும் பார்க்க கூடுதலாக உள்ளது.

## முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி

22657
LIBRARY & INFORMATION CENTRE

பத்தி 13.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தெங்கு உற்பத்தி 15.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. சிறு ஏற்றுமதிப் பயிர்த் துணைத்துறையின் உற்பத்தியும் 1979ஆம் ஆண்டுச் செயலாற்ற மட்டத்திலும் பார்க்க ஒன்றில் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ அல்லது நிலையாகவோ இருந்திருக்கலாம்.

வெளிக்களல் பயிர்த் துணைத்துறையில் நெல்லின் உற்பத்தி 1979 ஆம் ஆண்டின் ஒரு சதவீதமான சிறிய வீழ்ச்சிக்கு எதிராக 11.3 சதவீதத்தால் அதிகரித்தது. சிறு உணவுப் பயிர்த்துறையும் உற்பத்தியில் சிறிதளவு அதிகரிப்பைப் பதிவு செய்தது. பின்னோக்கிய போக்குகளால் முன்னைய ஆண்டின் வெளியீட்டில் ஏறத்தாழ 25 சதவீத குறைப்பினைக் கொண்டிருந்த கரும்பு, உற்பத்திப் போக்கினை மாற்றும் வகையில் 1980 ஆம் ஆண்டில் 43 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. மீன், கால்நடை உணவுத் துணைத்துறையிலும் அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. மீனும் அதேபோல் பால் உற்பத்தியும் 8.8 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் முட்டை உற்பத்திகள் 26 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தன.

பல ஆண்டுகளாகத் தொடர்ந்தும் ஏமாற்றமளித்துக் கொண்டிருக்கும் வேளாண்மைத்துறையின் செயலாற்றம் மிகக் கவனத்துடன் நோக்கப்படல் வேண்டும். தவறிப் போகும் தென்மேற்குப்பருவகாற்றுமழை, தெங்கு, தேயிலை, ஆகியவற்றின் உற்பத்தியைப் பாதிக்கும் காரணியாக இருந்திருக்கின்றது. எனினும், 1979 இன் ஆண்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டவாறு அரசுடைமையாக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் முகாமைச் சிக்கல்கள், மரபுவழி ஏற்றுமதிப் பயிர்களின் மீதான நெகிழ்ச்சியற்ற வரி அமைப்புக்கள், சிறு உடைமையாளர் துறையின் உற்பத்தி அதிகரிப்பிற்குப் போதியளவு ஊக்குவிப்புக்கள் குறைவாக இருந்தமை போன்ற கட்டுப்படுத்தத்தக்க காரணிகளின் விளைவாக வேளாண்மைத் துறையில் சீரற்ற செயலாற்றம் காணப்பட்டது.

நெற்துணைத்துறை அதற்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் செயலாற்றியது. 1980 இல் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு அப்போது நிலவிய கவர்ச்சியான சிறந்த சந்தை விலைகளே முதன்மைக் காரணமாகும். இது, வேளாண்மை உள்ளீட்டுப் பொருட்களின் விலைகள் பெருமளவிற்கு அதிகரித்த நிலையிலும்கூட வேளாண்மையாளர்கள் பயனுள்ள வருமானத்தைப்பெற உதவியது. மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்படி 1980ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் திறந்த சந்தையில் நெல்லின் சராசரி விலை புசலொன்றிற்கு ரூ. 46 ஆக இருந்தது. இது பின்னரைப் பகுதியில் புசலொன்றிற்கு ரூ. 58இற்கு அதிகரிக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டில் பெருமளவான வேளாண்மையாளர்கள் தமது நெல்லைத் தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு விற்பனை செய்ததுடன் மொத்த உற்பத்தியில் 28 சதவீதத்திற்குச் சமமான 541,000 மெற்றிக் தொன்கள் கொள்வனவை 1979இல் செய்த நெற் சந்தைப்படுத்தும் சபை (நெசச) அதற்கெதிராக 1980இல் 211,000 மெற்றிக் தொன்களை, மொத்த உற்பத்தியில் 10 சதவீதத்தை மட்டுமே கொள்வனவு செய்யக் கூடியதாக இருந்தது. 1979 நவெம்பரில் வளமாக்கி உதவுதொகை அதிகரிப்பு அறிவிக்கப்பட்டமை வளமாக்கிப் பயன்பாட்டு ஊக்குவிப்பில் விரும்பத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியமையால் உற்பத்தியும், ஏக்கருக்கான விளைச்சலும் கூடுவதற்கு ஏதுவாயிற்று, 1980ஆம் ஆண்டில் நெல் உற்பத்திக்கான வளமாக்கி வழங்கலின் அதிகரிப்பு 97சதவீதமாக இருந்தது,

தெங்கு உற்பத்தி மிகக் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமைக்கு முதன்மையாகத் தென்னை வளரும் பகுதிகளில் நிலவிய வரட்சி நிலைமைகளே பெரி

தும் காரணமாகும். அண்மை ஆண்டுகளில் காணத்தக்கதாயிருந்த அதிகரித்த வளமாக்கி வழங்களிலிருந்தான நன்மை பயக்கத்தக்க விளைவுகள் கூட, நீண்ட வரட்சி, வானிலை நிலைமைகளினால் பயனளிக்க முடியாமல் போயின.

தேயிலைத் துணைத் துறையிலும் கூட 1980இல் வரட்சியின் தாக்கங்கள் வன்மையாக உணரப்பட்டது. ஆனால், பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நோக்கப்பட்டு வரும் பெருந்தோட்டத் துறையின் திறமையற்ற முகாமை, இரண்டு கூட்டுத்தாபனங்களையும் எதிர்நோக்கும் திரவச் சிக்கல்கள், உயர்ந்து செல்லும் செலவுகள், வெளிப்படையாக உள்ள தொழிலாளர் பற்றுக்குறை ஆகியனவும் குறைந்தமட்ட உற்பத்திக்கு உதவியிருக்கலாம். இறப்பர் துணைத்துறையில், பல ஆண்டுகளாக மீள்நடுகை புறக்கணிக்கப்பட்டு வந்ததன் காரணமாக முதிர்ச்சியடையும் மரங்கள் அதிகரிக்கின்றமை, இருக்க வேண்டிய மட்டத்திற்குக் கீழ் பேணல் இருக்கின்றமை, மீள் நடுகை நோக்கங்களுக்காக மரங்கள் பிடுங்கப்படுவதன் விளைவாகப் பால் எடுக்கும் பரப்புக்கள் குறைவடைந்தமை ஆகியன 1980ஆம் ஆண்டில் இறப்பர் உற்பத்திக் குறைவிற்கு முதன்மைக் காரணங்களாக இருந்தன.

விலங்கு வளர்ப்புத்துறையில் பெரும் அளவில் சில உற்பத்தியாளர்கள் ஈடுபட்டதன் விளைவாக 1980இல் கோழிப்பண்ணைத் தொழில் மிகக் கணிசமான விரிவைப் பதிவு செய்தது. அரச உதவு தொகையினால் இயலச் செய்யப்பட்ட குறைந்த தீன் விலைகள் இக்கைத்தொழிலின் விரிவிற்கு உதவின. வளர்ச்சிக்கான தூண்டுதல்கள் மீன் பிடித் துறையிலும் காணப்பட்டன. அரசதுறையின் மீன் உற்பத்தியில் நிலவிய குறையை ஈடுசெய்யும் வகையில் 1980ஆம் ஆண்டில் தனியார்துறையின் மீன் உற்பத்தி அதிகரித்தது. மிகப் பெருமளவு உதவுதொகை விலைகளில் மீன்பிடிக் கருவிகள் ஏனைய மூலதன முதலீடுகள் பெருமளவிற்குக் கிடைக்கத்தக்கதாக இருந்ததன் காரணமாக 1980ஆம் ஆண்டில் மொத்த மீன்பிடி உற்பத்தி 9 சதவீதத்தால் அதிகரித்தது. 1980ஆம் ஆண்டில் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகள் மீன் கொள்வனவைப் பெரிதும் கவனத்தில் கொண்டதாக இருந்தது. முன்னைய ஆண்டின் மட்டத்திலும் பார்க்கக் கொள்வனவுகள் 30 சதவீதத்தால் அதிகரித்தன. மறுபுறத்தில் கூட்டுத்தாபனத்தின் மீன் உற்பத்தி 48 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உடன்படிக்கை முடிவுற்றதைத் தொடர்ந்து தென்இந்தியாவின் தென்கரைக்கு அப்பால் உள்ள ''வாட்ச்கண்ட மேடை''யில் கூட்டுத்தாபனத்தின் இழுவைக் கப்பல்கள் மீன்பிடிக்க முடியாமல் போனமையே முதன்மைக் காரணமாகும். எனினும் மீன் கொள்வனவில் கணிசமான அளவு அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாக மீளாய்விற்குரிய ஆண்டில் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் மீன் வழங்கல் 13 சதவீதங் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது.

கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு பன்னாட்டு அபிவிருத்தி முகவர் நிலையம் (பஅமு), நெதர்லாந்து அரசு ஆகியவற்றின் உதவியுடன் 1980இல் பல பண்ணை அபிவிருத்திச் செயற்றிட்டங்களை மேற்கொண்டது. தேசிய பாற்சபையின் (தேபாச) பால் சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை 1980ஆம் ஆண்டுக் காலத்தில் அதிகரித்தன. 1980இல் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகளும் அளவீடுகளும் பால் உற்பத்தியின் அதிகரிப்பில் விரும்பத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. தற்காலிக மதிப்பீடுகளின்படி 1980ஆம் ஆண்டில் தீவு முழுவதினதும் பால் உற்பத்தி 9 சதவீதமாக அதிகரித்த வேளையில் தேபாசயுடன் தொடர்பான புள்ளி விபரங்கள் திரவப்பால் உற்பத்தியில் 6 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டின.

மேலும் 1980ஆம் ஆண்டில் கணிசமான நிறுவன மாற்றங்கள் வேளாண்மைத் துறையில் இடம் பெற்றன. மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை (மதோ அ சபை) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (இஅபெகூ) எனப் பெயர் கொண்ட இரண்டு அரசுடமையாக்கப்பட்ட பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங் களும் மீள அமைக்கப்பட்டு இரண்டு அமைச்சுக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டன. பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டதனுல் இவ்விரண்டு கூட்டுத்தாபனங்களினது தொழிற்பாடுகள் மீண்டும் பன்முகப்படுத்தப்பட்டன. மதோஅ சபையின் தெரிந் தெடுக்கப்பட்ட பிரதேசச் சபைகள் அற்றன், கண்டி, பதுளை, கேகாலை ஆகிய இடங் களில் அமைந்த வேளையில் இஅபெ கூட்டுத்தாபனம் அதன் பிரதேசச் சபைகளை அற்றன், நுவரெலியா, களுத்துறை, காலி ஆகிய இடங்களில் அமைத்துள்ளது. கொழும்பிலுள்ள தலைமை அலுவலகங்கள் அதிகாரங்களைக் கையளிப்பதில் ஓரள விற்கு ஆர்வமற்றவையாக இருந்தமையால் பன்முகப்படுத்தல் சட்டம் பெருந் தோட்டத்துறையில் முகாமையில் எவ்வித உடனடியான அபிவிருத்தியையும் கொண்டு வரவில்லை. கொள்கை முடிவுகள் தொடர்ந்தும் ஒரு நிலைப்படுத்துவ தாக இருந்தமையால் இவ்வேற்பாட்டின் முழு நன்மைகளும் உணரப்பட முடி யாமல் போயிற்று.

''விலை நிர்ணயிப்பாளராகவும்'' ஏறத்தாழ ஒரு தனியுரிமைத் தொழிற்பாட் டாளராயும் இருந்த நெசசவின் நடவடிக்கைகளின் செயலாற்றம், இவ்வாண்டில் நெற்சந்தையில் ஆகக் குறைந்த விலையினைத் தொழிற்படுத்துபவராக பெரும் மாற் றங்களுக்கு உட்பட்டது. 1980 நவெம்பர் வரையில் புசலொன்றுக்கு ரூ. 40 ஆக இருந்த நெசசவின் உத்தரவாத விலை ரூ. 50 ஆக மீள அமைவு செய்யப்பட்டு நெல்லிற்கான குறைந்த விலையாகியது. எனினும், அதிகரித்துச் செல்லும் நுகர் வின் பொருட்டு தனியார் வர்த்தகர்கள் வேளாண்மையாளர்களுக்கு உயர்ந்த விலை யினை வழங்குவதன் விளைவாக நெசசவின் கொள்வனவுகள் குறிப்பாக இவ்வாண் டின் பின்னரைப் பகுதியில் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. உண்மையில் 1980 ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் நெசசவின் மொத்தக் கொள்வனவுகள் 1,700 மெற்றிக் தொன்களாக அல்லது கடந்த ஆண்டின் இதே காலத்தில் சபை செய்த கொள்வனவில் 2 சதவீதமாக மட்டுமே இருந்தது.

நெற்கொள்வனவில் நெசசவினுல் எதிர்நோக்கப்பட்ட அதிகரித்துச் செல்லும் இடர்ப்பாடுகள் குறிப்பிட்ட பெரும் சிக்கல்களை உடையனவாக இருக்கின்றன. இவற் றில் சில மிகப் பெரும் விளைவுத் தன்மையுடையனவாக இருக்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக உண்மையிலேயே புலப்படத்தக்கதாக உள்ள நெசசவின் மூல தன இருப்பின் அதிகரித்துச் செல்லும் குறைப்பயன்பாட்டைக் குறிப்பிடலாம். இது மிகக் கவனத்திற்குரியதாகும். நெசசவின் பெரும்பாலான அரிசி ஆலைகள் 1980இல் சில மாதங்கள் மட்டுமே தொழிற்பட்டதுடன் இந்நிலைமை சில ஆண்டுகளில் இன்னும் மோசமடையலாம். உணவு ஆணையாளரின் (உஆ) தாங்கிருப்புத் திட் டத்தில் நெசச ஒரு பங்காளராகையால் சில நேரங்களில் நெசச, உஆ விற்குப் போதுமான அளவு அரிசியை வழங்குவதில் பெரும் இடர்ப்பாடுகளை எதிர் நோக்கு கிறது. மேலே குறிப்பிடப்பட்டவற்றைவிட வர்த்தக இடங்களுக்கே வலிந்து செல்வதன் மூலமோ அல்லது பொருத்தமான சரியான வழிமுறைகள் மூலமோ நெசச நெற்கொள்வனவுகளை அதிகரித்தாலொழிய தற்போதைய கொள்வனவில் குறைந்தமட்டம் தொடர்ந்தும் இருப்பின், திறந்த சந்தைக்கு அரிசியை தொடர்ந்து வழங்குவதில் எதிர் காலத்தில் பெரும் இடர்ப்பாடுகளை எதிர் நோக்கும்.

மாகோவில் அமைந்த வளமாக்கி கலத்தல், வழங்கல் செயற்றிட்ட பிரிவின் தொழிற்பாடுகளின் விளைவாக நாட்டின் பல பாகங்களிலும் வளமாக்கி வழங்கலில்

முன்னேற்றம் காணப்பட்டது. இத்திட்டக்கூறு ஏறத்தாழ 16,000 தொன்கள் கொள்வனவு கொண்ட களஞ்சியத்தையும், மணிக்கு 10 தொன்கள் இயலளவைக் கொண்ட கலக்கும் பொறியையும் கொண்டிருக்கிறது. 1979 இன் 16,000 தொன்கள் வழங்கலுடன் ஒப்பிடுகையில் 1980இல் ஏறத்தாழ 45,000 தொன் வளமாக்கியை வழங்கியது.

காணிச் சீர்திருத்தத்தின் கீழ் முன்னர் காணிச் சொந்தக்காரரிடமிருந்து பெறப்பட்ட நிலங்கள் தொடர்பாக அவர்களால் இழப்பீடுகளுக்காகச் செய்யப்பட்ட விண்ணப்பங்களை காணிச்சீர்திருத்த ஆணைக்குழு தொடர்ந்தும் மீளாய்வு செய்தது. 1980இல் மொத்தமாக 4,134 எக்டேயர்கள் (10,211 ஏக்கர்கள்) முன்னைய காணிச் சொந்தக்காரர்களுக்கு மீண்டும் வழங்கப்பட்டதுடன், இவ்வாண்டு இறுதியில் முன்னைய காணிச் சொந்தக்காரர்களுக்கு திரும்ப வழங்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 9,662 எக்டேயர்களாக (23,864 ஏக்கர்கள்) அல்லது 1972 ஆம் ஆண்டில் அரசின் உடைமையாக்கப்பட்ட மொத்தப்பரப்பில் 4.4 சதவீதமாக இருந்தது.

1972 ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் ரூ. 342 இலட்சம் கொண்ட தொகை முன்னுள் காணிச் சொந்தக்காரருக்கு வழங்கப்பட்டதையடுத்து, இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மொத்த இழப்பீட்டுக் கொடுப்பனவு ரூ. 2,732 இலட்சமாகியது. 1975 ஆம் ஆண்டின் திருத்த ஏற்பாடுகளின் 1980 ஆம் ஆண்டின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவில் இழப்பீட்டுக் கொடுப்பனவு ரூ. 693 இலட்சங்களாகும். இத்தொகையில் ரூ. 623 இலட்சம் 61 ஸ்டேர்லிங் கூட்டு நிலையங்கட்கு வழங்கப்பட்டன. 1980 ஆம் ஆண்டு முடிவில் பொதுக்கூட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுக் கொடுப்பனவு ரூ. 2,330 இலட்சங்களாகும்.

1979ஆம் ஆண்டின் எண் 43 கொண்ட நிலக்கொடை வழங்கல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தனிப்பட்டவர்களுக்கான நிலம் மீள வழங்கல் திட்டத்தின் தொழிற்பாடுகள் 1980 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து இவ்வாண்டில் 3,581 எக்டேயர்கள் கொண்ட மொத்தத்தொகை தனிப்பட்டவர்களுக்கு மீளப் பகிர்ந்தளிக்கப்பட்டது. மீளப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலங்களின் பொருளியல் பயன்பாடு, விரிந்த சந்தைப் படுத்தும் வசதிகள், போதுமான அளவு ஆற்றல் போன்ற துணைப்பணிகளின் தேவைகளில் தங்கியிருப்பதால் இவற்றினை ஒட்டி மிகக்கூடுதலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்துவது மிகவும் வேண்டியதாகும்.

1979 இல் காணப்பட்ட பயிர்ச்செய்கை நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் வீழ்ச்சிப்போக்கு 1980 இலும் மாற்றமின்றியிருந்தது. 1980 இல் ரூ. 1,019 இலட்சமாக இருந்த மொத்த கிராமக் கொடுகடன் தொகை 1979 இல் வழங்கப்பட்ட தொகையிலும் பார்க்க 4 சதவீதம் குறைவாக இருந்தது. இதுவரையிலான வேளாண்மைக் கடன்களைக் கவனத்திற் கொள்ளுமிடத்து 1980இல் வழங்கப்பட்ட வேளாண்மைக் கடன்களின் பெறுமதி அனைத்தையும் உள்ளடக்கிய கிராமக்கொடுகடன் திட்டம் தொடங்கப்பட்ட 1973ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட கொடுகடனின் சராசரி அளவிலும் பார்க்க 41 சதவீதம் குறைவானதாக இருந்தது. 1979 ஆம் ஆண்டு அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டவாறு கிராமக் கொடுகடனில் காணப்பட்ட இக் குறைவிற்கு காரணமாக அரசின் சார்பில் மத்தியவங்கியால் தொழிற்படுத்தப்பட்ட 75 சதவீதமான கொடுகடன் உத்தரவாதத் திட்டம் மீளப்பெறப்பட்டமை அமைகிறது

1980 இல் அரசின் ஆதரவிலான மீள்நடுகைத்திட்டத்திற்கான ஆர்வம் மிகவும் நிறைவானதாக இருந்தது. தெங்குத்துறையில் மீள நடுகை, புதிய பயிரிடுகை ஆகியன கடந்த ஆண்டில் அடையப்பெற்ற மட்டத்திற்கு மேலாக குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக்காட்டியதுடன் அதிகரிப்புக்கள் முறையே 59 சதவீதமாகவும் 80 சதவீதமாகவும் இருந்தன. இறப்பரில் மீள்நடுகை செய்யப்பட்ட பரப்பளவு 30 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் விரும்பப்பட்ட மீள்நடுகை இலக்குகளுக்கு மிகக்கீழ் வீழ்ந்த மீள்நடுகைப் பரப்புகளுக்கு, முதிர்ச்சியடைந்த மரங்களை நேர காலத்துடன் அகற்றுதல் மற்றும் செய்யப்படாத வேலைகளைச் செய்தல் இரண்டும் தேவைப்பட்டன. கடந்த சில ஆண்டுகளாக மிகக் குறைந்த செயலாற்றத்தினை கொண்டிருந்த தேயிலை மீள் நடுகை நிகழ்ச்சித்திட்டம் 1980ஆம் ஆண்டில் மேலும் வீழ்ச்சியடைந்தது. 1979இல் மொத்தமாக மீள்நடுகை செய்யப்பட்ட பரப்பளவு 2,491 எக்டேயர்களாக இருந்தன. 1980இல் மீள்நடுகை செய்யப்பட்ட பரப்பளவு சிறிது குறைவாக 2.078 எக்டேயர்களாக இருந்தன. இ. அ. பெ. கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களில் மீள்நடுகையில் குறைந்தளவு ஆர்வம் காட்டப்பட்டமை ஓரளவிற்கு கவனிக்கத்தக்கது.

1979 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட மீள்நடுகைக்கான உதவுதொகையின் அதிகரித்த வீதங்கள் சிறுஉடமையாளர்களின் சிறப்பாக தெங்கு, இறப்பர், துணைத்துறைகளின் அதிகரித்த மீள்நடுகை அதிகரிப்புக்களில் விரும்பிய தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றமை நன்கு தெரிகின்றது. இதுவரை அரசதுறைப் பெருந்தோட்டங்களை பொறுத்தவரை இறப்பரில் குறிப்பிடத்தக்க மீள்நடுகை நடவடிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தேயிலையைப் பொறுத்தவரை மீள்நடுகை அளவு 21 சத வீதத்தால் வீழ்ந்தது. முன்னைய ஆண்டு அறிக்கைகளில் மீள மீள வலியுறுத்தப்பட்ட மீள்நடுகைக்கான உதவுதொகைகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படவேண்டும்.

சிறு உணவுப் பயிர்களுக்கான ''ஆகக்குறைந்த விலைத்திட்டம்'' 1980 ஆம் ஆண்டில் தொடர்ந்ததும் மேற்கொள்ளப்பட்டது. இவ் விலைகள் இவ்வாண்டுகாலத்தில் மேல் நோக்கித் திருத்தப்பட்டன. தட்டைப்பயறு, பயறு, உருளைக்கிழங்கு ஆகியவற்றை உள்ளடக்குவதற்காக இத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கியிருந்த பண்டங்களின் எண்ணிக்கை பன்னிரண்டிற்கு அதிகரிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழான கொள்வனவுகள் சிறிதளவாக இருந்தபோதிலும் ஆகக்குறைந்த விலைகள் அதிகரிக்கப்பட்டதன் விளைவாகவும் சந்தைப்படுத்தல் வசதிகளின் காரணமாகவும் சில பண்டங்களின் உற்பத்தி குறிப்பாக நிலக்கடலை, தட்டைப்பயறு, பயறு, உருளைக்கிழங்கு போன்றவற்றின் உற்பத்தி பெருமளவு அதிகரித்தது.

1980 இன் பின்னரைப்பகுதியில் மரக்கறி சிறு உணவுப்பயிர்களின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் காணப்பட்டன. நாட்டின் முதன்மையான உற்பத்திப் பகுதிகளில் இவ்விடயங்கள் பலவற்றின் பண்ணைக் கொள்வனவு விலைகள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ந்தமை இப்பண்டங்களின் பயிர்செய்கையைக்கூட இலாபகரமற்றதாக்கியது. மரக்கறிக்கு போதுமான சந்தைப்படுத்தும் ஒழுங்குகள் குறைவாக இருந்தமைக்கும் சில சான்றுகள் இருந்தன. பண்ணைவிலைகள் குறைவாக இருந்தபோதும் நகர்புறங்களிலுள்ள நுகர்வோர் குறிப்பிடத்தக்க உயர் விலைகளில் இப்பண்டங்களைக் கொள்வனவு செய்தனர். நாட்டின் சரக்குவண்டிப் போக்குவரத்துத் தொகுதி குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தநிலையிலும் களஞ்சியப்படுத்தல், சந்தைப்படுத்தல் வசதிகள் போதியதற்றதாக காணப்பட்டமைக்குச் சான்றுகள் காணப்பட்டன. இத்துறை திறமையான முறையில் அமைக்கப்பட்டிருந்தால் 1980 ஆம் ஆண்டில் வழங்கலை அதிகரிக்க உடனடியான நடவடிக்கைகளை

34803

மேற்கொள்ளல், குடியிருப்பாளரின் வரவு செலவில் பெருந்தொகையைக் கொண்டிருக்கும் விடயங்களின் வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் போன்றவற்றிலிருந்தும் குறிப்பிடத்தக்க இடர்நீக்கத்தைப் பெற்றிருக்க முடியும். இத்துறையில் உற்பத்தியாளர், நுகர்வோர் இருவருக்கும் கூடியளவு சாதகமான இடர்நீக்கத்தினை அளிக்க மேற்கொண்ட முயற்சியில் அரசதுறை முயற்சிகள்கூடத் தவறிப்போனமையை ஆண்டில் பலதடவைகள் காணக்கூடியதாக இருந்தது.

நாட்டின் முதன்மையான அபிவிருத்திச் செயற்றிட்டமான விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளில் கணிசமான முன்னேற்றம் 1980 ஆம் ஆண்டில் காணப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மீது ஒன்றிணைந்த மொத்தமாக ரூ. 34,360 இலட்சம் செலவு செய்யப்பட்டதுடன், ஏறத்தாழ 77 சதவீதம் 1980 ஆம் ஆண்டிலேயே செலவுசெய்யப்பட்டது.

விக்டோரியா செயற்றிட்டம் தொடர்பான அணை, சுரங்கம், மின் நிலையம் ஆகியவற்றின் கட்டிட அமைப்புக்களும் கருவி வழங்கல் ஆகியன தொடர்பான ஒப்பந்தங்களின்படி ஒன்றுதிரட்டிய செய்திகளின் அடிப்படையில் இத்திட்டத்தின் மீது செலவு செய்யப்பட்ட ஏறத்தாழ ரூ. 10,000 இலட்சங்கொண்ட மொத்தத் தொகையில் ரூ. 9,000இலட்சங்கொண்ட தொகை 1980 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்டிருக்கின்றமையைக் காணலாம். இச் செயற்றிட்டம் முற்றுப்பெற்று வலுநிலையத்தின் தொழிற்பாடு 1984 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கொத்மலை வேலைகளைத்தொடர்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. செயற்றிட்டத்தின் தொடக்க அமைவிட வேலைகளும் நிலக்கீழ் சுரங்கத்தின் கட்டிட அமைப்புக்களும் தொடங்கப்பட்டுள்ளன. ஆனால் அணை அமைப்பதற்கான ஒப்பந்தம் செய்யப்படவேண்டியுள்ளது. கொத்மலை செயற்திட்டத்திற்கான மொத்தச் செலவினம் 1980 முடிவில் ஏறத்தாழ ரூ. 11,450 இலட்சமாகும். இதில் ரூ. 8,620 இலட்சம் 1980இல் செலவு செய்யப்பட்டது. மாதுறுஓயா செயற்றிட்டத்திற்கான நீர்த்தேக்கம், சுரங்கம் ஆகியவற்றுக்கான கட்டிட அமைப்பு ஒப்பந்த வேலைகளுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மாதுறுஓயா செயற்திட்டத்தின் மீது மொத்தமாகச் செலவு செய்யப்பட்ட ரூ. 4,820 இலட்சத்தில் ரூ. 3,830 இலட்சங்கொண்ட தொகை 1980இல் செலவு செய்யப்பட்டது.

மகாவலிப் பகுதியின் கீழ் அருவி நீர்ப்பாசனத்தின் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்பட்டது. 1980 இல் ஏறத்தாழ ரூ. 2,400 இலட்சம் 'இ' முறையின்மீது செலவு செய்யப்பட்டது. இங்கு 24,291 எக்டேயர்கள் அபிவிருத்தி செய்யப்படும். 'ஆ' முறையின் கீழ் 48,583 எக்டேயர்கள் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 1980இல் ரூ. 990 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

1980இல் கலாவெவ பகுதியில் (முறை ''ஏ'' பகுதியில்) ஏறத்தாழ 6,700 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. 1980 இறுதியில் மொத்தமாக ஏறத்தாழ 20,000 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. ஒவ்வொன்றுக்கும் பயிர்ச்செய்கை நோக்கங்களுக்காக ஏறத்தாழ 1 எக்டேயரும், வீட்டுத்தோட்டத்திற்காகவும் வீடமைப்பதற்காகவும் 1/5எக்டேயரும் ஒதுக்கப்பட்டன. உல்கிட்டியப்பகுதியில் (முறை 'இ' பகுதி) ஏற்கனவே குடியமர்ந்த 1000 இற்கு மேற்பட்ட குடியிருப்பாளர்கள் குடியிருப்புஅபிவிருத்திக்கான தொடக்கவேலைகளில் பங்கெடுப்பதற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

## அட்டவணை 1.8
## விரைவுபடுத்தப்பட்ட மகாவலித்திட்டம்—செலவுகளின் மதிப்பீடுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| செயற்றிட்டம் | 1980க்கான வரவு செலவு திட்டச் செலவினம் | | | 1980க்கான உண்மையான செலவினம் (அ) | 1980இறுதி வரையான ஒன்று சேர்ந்த செலவினம் (அ) |
|---|---|---|---|---|---|
| | தற்காலிகம் | குறை நிரப்புக்கள் | மொத்தம் | | |
| 1. விக்டோரியா நீர்த்தேக்கம் ... | 500 | 685 | 1,185 | 901 | 999 |
| 2. கொத்மலே நீர்த்தேக்கம் ... | 500 | 145 | 645 | 862 | 1,145 |
| 3. ரன்தெனிகல நீர்த்தேக்கம் ... | 10 | 33 | 43 | 30 | 55 |
| 4. மாதுறு ஓயாவும் இணைக்கும் கால்வாயும் ... | 300 | 274 | 574 | 383 | 482 |
| 5. உல்யிட்டிய நீர்த்தேக்கம், மினிப்பே அணைக்கட்டு இடைப்போக்கினுள்ள கால்வாய் ஆகியன (இ' பொறியியல் உட்பட) ... | 75 | 70 | 145 | 145 | 284 |
| 6. நீர்ப்பாசன முறை 'அ' ... | 10 | — | 10 | 3 | 6 |
| 7. நீர்ப்பாசன முறை 'ஆ' . | 75 | 65 | 140 | 99 | 117 |
| 8. நீர்ப்பாசன முறை 'இ' ... | 75 | 50 | 125 | 240 | 345 |
| 9. நீர்ப்பாசன முறை 'ஈ' ... | 1 | — | 1 | 1 | 3 |
| மொத்தம் ... | 1,546 | 1,322 | 2,868 | 2,664 | 3.436 |

(அ) தற்காலிகம்.

மூலம்: மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபை

1980 இல் 'ஏ பகுதியில்' ஏறத்தாழ 15,000 எக்டேயர்கள் கொண்ட பயிர்செய்கைப் பரப்பு பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டு வரப்பட்டது. இதில் ஏறத்தாழ 13,500 எக்டேயர்களில் நெல் பயிர் செய்யப்பட்டது.

முழுமையான கிராம அபிவிருத்தி நோக்க கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு நீர்ப்பாசனம், களப்பயிர்கள், வேளாண்மைக்கொடுகடன், விலங்கு வளர்ப்பு, நிலக்கீழ் நீர்க்கண்டுபிடிப்பு, நலம், கல்வி, கிராம மின்னூட்டல் போன்றவற்றிற்கு உதவி வழங்குவதற்காக பல மாவட்ட செயற்றிட்டங்கள் 1980 ஆம் ஆண்டில் கவனத்திற் கொள்ளப்பட்டன. உலக வங்கியின் முழுமையான கிராம அபிவிருத்திச் செயற்றிட்டம் இரண்டின்கீழ் புத்தளம், மாத்தளை ஆகிய இரண்டு மாவட்டங்களும் ஏறத்தாழ ரூ. 7,800 இலட்சம் செலவில் 1981இல் அபிவிருத்தி செய்யப்படும். உலகவங்கியின் அபிவிருத்தி செயற்றிட்டம் மூன்றின் கீழ் வரும் மன்னார், வவுனியா ஆகிய இரண்டு மாவட்டங்களினதும் செயற்றிட்டங்களின் தயாரிப்பு வேலைகள் தொடக்க நிலையிலேயே இருக்கின்றன. நுவரேலியா மாவட்டத்தில் இனங்கண்டு கொள்ளப்படவிருக்கும் குறிப்பிட்ட முன்னுரிமை செயற்றிட்டங்களுக்கு நிதியிட நெதர்லாந்து அரசு விருப்பம் தெரிவித்துள்ளது. இது போலவே பெல்சிய அரசும் மொனராகலே மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கு நிதியிட விருப்பம் காட்டியதுடன் ஏறக்குறைய 1,300 இலட்சம் செலவில் அணைகட்டவும் சிறப்பாக நீர்ப்பாசனம் குடியிருப்பு வசதிகள் போன்றவற்றைச் செய்யவும் மகந்தன ஓயாப் பகுதியைத் தெரிவு செய்துள்ளது.

ஏனைய இரண்டு முழுமையான செயற்றிட்டங்களின் வேலைகள் தொடங்கப்பட்டு சில முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ள நோர்வே அரசினால் நிதியிடப்பட்ட அம்பாந்தோட்டைச் செயற்றிட்டத்துக்கு ரூ.3,350 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளதுடன் மாத்தறைச் செயற்றிட்டம் சுவீடன் அரசின் கொடை வழங்கீடான ரூ. 550 இலட்சங்களிலிருந்தும் நிதியிடப்படும்.

1979ஆம் ஆண்டு அறிக்கையில் வலியுறுத்தப்பட்டவாறு பற்றுக்குறை நிதியினுலும் அதுபோன்று அரச முகவரிடையே சரியானமுறையில் பொறுப்புக்கள் பிரிக்கப்படாமையினுலும் சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டன. 1980 ஆம் ஆண்டிலும் இந்நிலையில் எந்த முன்னேற்றமும் இருக்கவில்லை. வேளாண்மைவெளியீட்டில் குறுங்கால அதிகரிப்பொன்றை அடைவதற்கான விரைவானதும் சிக்கனமானதுமான வழி முன்னுரிமை அடிப்படையில் சிறிய நீர்ப்பாசனத்திட்டங்களின் மீள் அமைப்பு வேலைகளுக்கும் முறையான பேணல்களுக்கான தற்போதைய மூலவள ஒதுக்குகளை அதிகரிக்க வேண்டுமென்பதை மீண்டும் குறிப்பிட வேண்டியதாய் இருக்கிறது. இத்தகைய நடவடிக்கைகள் பெரிய, சிறிய நீர்ப்பாசன வேலைகளுக்கிடையே மூலவளங்களை ஒதுக்குவதில் நிலவும் சமனற்ற தன்மையைச் சீர்செய்யும்.

**தேயிலை**

தேயிலை உற்பத்தி 1980 ஆம் ஆண்டில் 7 சதவீதத்தால் 1910 இலட்சம் கிலோக்கிறும்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இது 1959 ஆம் ஆண்டின் பின்னர் பதிவு செய்யப்பட்ட ஆகக்குறைந்த அளவாகும். உற்பத்தியிலேற்பட்ட இவ்வீழ்ச்சி மூன்று நிலங்களிலும் காணப்பட்டதுடன் கூடுதலான தாக்கம் மத்திய நிலத்தேயிலையிலேயே காணப்பட்டது. இங்கு உற்பத்தி 11 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உயர்தாழ் நிலங்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி முறையே 5 சதவீதமாகவும் 6 சதவீதமாகவும் இருந்தது. நாட்டில் பதிவுசெய்யப்பட்ட தேயிலை நிலங்களில் ஏறத்தாழ 53சத வீதத்தை அரசதுறைக் கூட்டுத்தாபனங்களான ம.தோ.அ. ச.வும் இ. அ. பெ. கூவும் முகாமைப்படுத்துவதுடன், இவைஏறத்தாழ 1300இலட்சம் கிலோகிறும்களை அல்லது மொத்த உற்பத்தியில் 68 சத வீதத்தை உற்பத்தி செய்தன. எனினும், அரசதுறைத் தொழிற்சாலைகளில் செயல்முறைகட்கு உட்பட்ட 250 இலட்சம் கிலோக் கிறும்கள் கொண்ட வாங்கப்பெற்ற பச்சை இலைத் தேயிலைகளையும் கணக்கில் கொள்ளும்போது இவ்விரண்டு அரசதுறைக் கூட்டுத்தாபனங்களினுல் மேற்கொள்ளப்பட்ட மொத்த உற்பத்தி 1,550 இலட்சம் கிலோக்கிறும்களாக அல்லது மொத்த உற்பத்தியில் 81 சதவீதமாக இருந்தது. இலங்கைத் தேயிலைச் சபையால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி அரசதுறைக் கூட்டுத்தாபனங்களின் தேயிலை உற்பத்தி முன்னைய ஆண்டின் செயலாற்றத்துடன் ஒப்பிடுகையில் 7.4 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தவேளையில் தனியார்துறையின் செயலாற்றம் 1.2 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

தேயிலைத் துணைத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் இவ்வாண்டில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து 1979ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதிலும் பார்க்க 3.5 சத வீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. 1979இல் ம. தோ. அ. சபை, இ. அ. பெ. கூ. ஆகிய இரண்டு கூட்டுத்தாபனங்களும் தமது வளமாக்கிப் பயன்பாட்டை சிறிதளவால் அதிகரித்தன. எனினும் 1980இல் வளமாக்கிப் பயன்பாடு 12 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. குறைந்தமட்ட வளமாக்கிப் பயன்பாட்டுக்கான முதன்மைக் காரணிகளில் ஒன்று 1980 இன் முன்னரைப்பகுதியில் நிலவிய நீண்ட வரட்சியாகும். இப்பாதகமான சூழ்நிலை எக்டேயருக்கான விளைவு, மொத்த உற்பத்தி ஆகிய இரண்டையும் பாதித்தது.

LIBRARY

## அட்டவணை 1.9

### தேயிலைப் புள்ளிவிபரங்கள் 1978—1980

| விடயம் | கூறு | 1978 | 1979 | 1980 (அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப. இ. கிலோக்கள் | 198.9 | 206.4 | 191.4 |
| 1.1. உயர் நிலம் ... | ப. இ. கிலோக்கள் | 71.7 | 76.5 | 72.6 |
| 1.2. மத்திய நிலம் ... | ப. இ. கிலோக்கள் | 61.0 | 62.5 | 55.6 |
| 1.3. தாழ் நிலம் ... | ப. இ. கிலோக்கள் | 66.2 | 67.4 | 63.2 |
| 2. பயிரிடப்பட்ட பரப்பு ... | '000 எக்டேயர் | 243 | 244 | 245 |
| 3. விளைச்சல் ... | எக்டேயர்க்கு/கிகி | 958 | 993 | 922 |
| 4. வளமாக்கி வழங்கல் ... | '000 மெ. தொன். | 115.6 | 105.4 | 101.7 |
| 5. மீளப்பயிரிடல் (ஆ) ... | எக்டேயர்கள் | 1,709 | 2,491 | 2,078 |
| 6. விலைகள் .. | | | | |
| 6.1. தேறிய கொழும்பு ... | ரூ / கிகி | 11.65 | 11.22 | 17.33 |
| 6.2. ஏற்றுமதி க. வ. பெ. ... | ரூ / கிகி | 33.22 | 30.51 | 33.41 |
| 7. உற்பத்திக்கான செலவு | ரூ / கிகி | 10.50 | 12.70 | 15.50 |
| 8. ஏற்றுமதிகள் .. | ப. இ. கி. கி. | 192.7 | 187.5 | 184.7 |
| 9. ஏற்றுமதி வருவாய் ... | ரூ. ப. இ. (சிஎஉ. ப. இ) | 6,400.9 (327) | 5,722.2 (284) | 6,170.1 (287) |
| 10. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக்கூட்டப்பட்ட பெறுமதி (இ) .. | | 10.9 | 7.9 | 6.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அ. தற்காலிகம்

ஆ. திருத்தப்பட்டது.

இ. பயிர்ச்செய்கையிலும் பதனிடலிலும் மட்டும்

1980இன் தேயிலைப் பயிர்ச்செய்கையின் கீழ் இருந்த பரப்பளவு முன்னைய ஆண்டின் அதே அளவிலேயே பெரும்பாலும் இருந்தது. பெருமளவான தாழ்நிலப் பரப்புக்களில் தேயிலை மீள்நடுகைக்கான அரசின் உதவுதொகை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 8,000 (எக்டேயரொன்றிற்கு ரூ. 19,760) ஆகவும் பெருமளவான உயர்நில, மத்திய நிலப்பரப்புக்களின் ஏக்கரொன்றிற்கு ரூ. 10,000 (எக்டேயர் ஒன்றிற்கு ரூ. 24,700) ஆகவும் மாற்றமின்றியிருந்தது. பழைய இறப்பர் நிலங்களிலும்புதிய நிலங்களிலும் உயர்விளைச்சல் தேயிலையைப் புதிதாகப் பயிர் செய்வதற்காகக் கடந்த ஆண்டில் ஏக்கரொன்றிற்கு ரூ. 4,750 ஆக (எக்டேயர் ஒன்றிற்கு ரூ. 11,733) அதிகரித்த உதவுதொகை 1980இல் தொடர்ந்தும் மாற்றமின்றியிருந்தது. கிடைக்கத்தக்க தரவுகளின்படி மீள்நடுகை செய்யப்பட்ட பரப்பளவு 1979இன் 2,491இலிருந்து 413 எக்டேயர்களால் வீழ்ச்சியடைந்து, 1980 இல் 2,078 எக்டேயர்கட்கு குறைவடைந்தது இவ்வீழ்ச்சியில் 92 சதவீதத்திற்கு இ.அ.பெ.கூட்டுத்தாபனத்தால் முகாமைப்படுத்தப்பட்ட தோட்டங்களே வகை கூறின. எனினும், 1980இல் இ. அ. பெ. கூட்டுத்தாபனத்தினுல் மீள் நடுகை செய்யப்பட்ட பரப்பு ம. தோ. அ. சபையினுல் மீள் நடுகை செய்யப்பட்ட அளவைவிட உயர்வானதாக இருந்தமையை இங்கு குறிப்பிடல்வேண்டும்.

மேலும் ஒவ்வாத வானிலை, இரண்டு கூட்டுத்தாபனங்களினுலும் பட்டுணரப்பட்ட திரவச்சிக்கல்களுடன் சேர்ந்து அதிகரித்துச் செல்லும் மீள்நடுகைக்கான செலவுகள் ஆகியன இணைந்து முழுமையான மிகக்குறைந்த செயலாற்றத்திற்கு இட்டுச்செல்ல காரணமாயின. பல்கிப் பெருகும் தேயிலையால் மீள் நடுகை செய்யப்பட்ட மொத்தப்பரப்பு 1980 ஆண்டு முடிவில் 36,139 எக்டேயர்களாக அமைந்து மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட பரப்பில் ஏறத்தாழ 15 சதவீதத்தைக்கொண்டிருந்தது.

பொதுவாக 1980இல் தேயிலை விலைகள் சாதகமாகவே இருந்தன. தேறிய (வரிகள் நீங்கலாக) சராசரி கொழும்பு ஏலவிலை முன்னைய ஆண்டில் நிலவிய சராசரி விலையிலும் பார்க்க 55 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைக் காட்டியது. இது, 1979இன் நடுவாண்டில் நடைமுறைக்கு வந்தவரிக்குறைப்பின் காரணமாக பெருமளவிற்கு ஏற்பட்டது. எனினும் சராசரி ஏற்றுமதி விலை (க. ஏ. பெ) 10 சத வீதத்தால் மட்டுமே அதிகரித்தது. சார்பற்ற ஏற்றுமதிகளின் விலைகளில் ஏற்பட்ட இம் முன்னேற்றத்திற்கு முதன்மையான உற்பத்திநாடுகளிலிருந்தான வழங்கலின் வருகை குறைவடைந்தமை காரணமாயிருக்கலாம். தயாரிக்கப்பட்ட ஒரு கிலோத் தேயிலைக்கான உற்பத்திச் செலவு 22 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப் படுகிறது. இவ்வாறு ஏற்பட்ட மொத்தஅதிகரிப்பிற்கு தேயிலைப்பெட்டிகள் போக்கு வரத்து, எரிபொருள் ஆகியவற்றின் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக அமைந்தது. இலங்கை தேயிலைச் சபையின்படி முழுத்தேயிலைக் கைத்தொழிலும் முன்னைய ஆண்டில் காணப்பட்ட பாதகமான இலாபத்திற்கு மாறாக உற்பத்தியா ளர் சாதகமானஇலாபங்களைப் பேணக்கூடியதாக இருந்தனர். இ. அ. பெ. கூ. மும் ம. தோ. அ. ச.யும் உற்பத்திசெய்யப்பட்ட ஒரு கிலோத் தேயிலைக்கு முறையே ரூ. 1.42, 95 சதம் கொண்ட சாதகமான இலாபத்தைப் பதிவுசெய்தன.

கடல் கடந்தநாடுகளின் நுகர்வில் உறைகளிலும், பைகளிலும் அடைக்கப்பட்ட தேயிலைக்கான கேள்வியில் அதிகரிப்பை அறியக் கூடியதாக இருந்தமையால் கூடு தலான ஏற்றுமதிகளின் ஊக்குவிப்பினைக் கருத்திற்கொண்டு அரசு இவ்விரண்டு விடயங்களுடன் தொடர்பான ஏற்றுமதித் தீர்வையில் கணிசமான குறைப்பை வழங்கியது. உறைகளிலும் பைகளிலும் அடைக்கப்பட்ட தேயிலையின்மீது ஒரே தன்மையில் கிலோ ஒன்றிற்கு ரூ. 10.50 விதிக்கப்பட்ட ஏற்றுமதித் தீர்வைகள் 1980 யூலை 1ஆம் நாளிலிருந்தும் முறையே கிலோவொன்றிற்கு ரூ. 8.50 இற்கும் ரூ. 1.00 இற்கும் குறைக்கப்பட்டன. எரிபொருள், தேயிலைப்பெட்டி, மின்வலு போன்றவற்றின் அதிகரித்த செலவுகளை உற்பத்தியாளர் ஈடுகொடுப்பதற்குஉதவும் நோக்கில் ''விலை உதவித்திட்டத்தின்'' கீழ் தொழிற்சாலைகளின் தயாரிப்புக் கட்ட ணங்களின் மீது குறைக்கத்தக்க தொகை 1980 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்தும் கிலோவொன்றிற்கு ரூ. 4.70 இலிருந்தும் ரூ. 5.40 இற்கு அதிகரிக்கப்பட்டது. ஏல விலைகளின் அதிகரித்துச் செல்லும் போக்கு, தேயிலையின் தரத்தை உயர்த்து வற்கான தேவை ஆகியவற்றினைக் கருத்திற்கொண்டு இத்திட்டத்தின்கீழ் உதவு தொகைக்கான தகைமையைப் பெறுவதற்கான குறைந்த விலை கிலோவொன் றிற்கு ரூ. 11.00 இலிருந்தும் ரூ. 12.00 இற்கு அதிகரிக்கப்பட்டது. ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் தேயிலை கலத்தல் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கான தீர்மா னத்தை அரசு எடுத்ததன் மூலம் இன்னுமொரு முக்கியமான கொள்கை வழிமுறை இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய நடவடிக்கை ஏற்றுமதி களின் பன்முகப்படுத்தலுக்கு உதவும்.

**இறப்பர்**

1980இல் இறப்பர் உற்பத்தி 1,330 இலட்சம் கிலோக்கள் எனத் தற்காலி கமாக மதிப்பிடப்பட்டதுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 200 இலட்சம் கிலோக்கள் அல்லது 12.7 சதவீத வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. உற்பத்தியில் ஏற்பட்ட குறைவிற்கு கடந்த காலத்தில் மீள்நடுகை மட்டங்கள் ஓரளவு மிகக் குறைவாக இருந்ததன் காரணமாக முதிர்ச்சியடைந்த இறப்பர் மரங்களேகாணப் பட்டதனல் விளைச்சலின் வீழ்ச்சியடைந்தபோக்கிற்கு முதன்மையான காரணமா யமைந்திருக்கலாம். அண்மை ஆண்டுகளில் மீள் நடுகை அதிகரித்தனல் பால் எடுக்கும் பரப்பளவு குறைவடைந்தமையும் ஏதுக் காரணிகளில் ஒன்ருக இருந்தது.

பொதுநல அமைப்பு நாடுகளின் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினுல் (பொ. அ. கூ.) தயாரிக்கப்பட்ட இறப்பருக்கான முதன்மைத்திட்டம் பயரிடப்பட்ட பரப்பளவில் ஏறத்தாழ 25 சதவீதமானவற்றின் உற்பத்திக்காலம் நான்கு ஆண்டுகட்கும் குறைவானதாகவே இருந்தமையை இனங்கண்டிருக்கிறது. தற்பொழுது வலியுறுத்தப்படத் தக்கதாயிருக்கும் இக்கட்டான சூழ்நிலைக்கு இத்துறையில் மீள நன்னிலைக்குக் கொண்டுவரும் உறுதியான நிகழ்ச்சித்திட்டம்உடனடியாகத்தேவைப்படுகிறது. சற்றுக்கடந்த காலத்தில் நிலவிய உயர்ந்தவிலைகளில் இருந்தும் இலாபத்தைப்பெறும் பொருட்டு சிறு உடமையாளர்களால் பின்பற்றப்பட்ட பால் எடுக்கும் நடைமுறைகளும், சிறு உடமையாளர்துறையின் தற்போதைய சராசரி விளைவுக்குறைவிற்கு காரணியாக இருக்கலாம்.

1980 ஆம் ஆண்டில் அரசுடமையாக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் இறப்பர் உற்பத்தியில் அதிகரிப்பு காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இ. அ. பெ. கூ. களின் தோட்டங்களில் இருந்தான உற்பத்தி ஏறத்தாழ 10 சதவீதமான அதிகரிப்பையும் ம.தோ. அ. சபையின் தோட்ட உற்பத்திகள் சிறியளவு அதிகரிப்பையும் காட்டின. இறப்பரின் மொத்த உற்பத்தியில் அரசுடமையாக்கப்பட்ட துறையின் பங்கு 1979இல் 30 சதவீதத்திலிருந்து 1980இல் 37 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் ம. தோ. அ. ச., இ. அ. பெ. கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் நிர்வாகத்திலிருந்த மொத்த இறப்பர் நிலத்தில் பால்எடுத்தலின் கீழுள்ள பரப்பு 25 சதவீதமாக மாற்றமின்றியிருந்தமை 1980 இல் சிறு உடைமையாளர் துறையின் செயலாற்றம் மிகக்குறைவாக இருந்தமையை எடுத்துக்காட்டுகின்றது. ஏனைய பெருந்தோட்டப்பயிர்களைப் போலவே சிறு உடமையாளர்களின் பொருளாதார சிக்கல்கள் முன்பு இருந்த நிலைமையிருந்தவாறே இருந்தன. முன்னைய ஆண்டினைப் போன்றே 1980 இலும் மீள் நடுகை வீதம் தொடர்ந்தும் அதிகரித்தது. 1980 இல் திருந்தியவகைகளுடன் 5,436 எக்டேயர்கள் மீளப்பயிரிடப்பட்டதுடன். 1979 ஆம் ஆண்டைக்காட்டிலும் 30 சதவீத அதிகரிப்பையும் காட்டியது. 1979 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட மீள்நடுகைக்கான உதவுதொகை அதிகரிப்பு மீள் நடுகையை விரைந்து ஊக்குவித்தது. உலக வங்கியின் உதவியுடன் அடுத்து ஐந்து ஆண்டுகளில் களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களில் ஏறத்தாழ 18,000 எக்டேயர்கள் மீள்நன்னிலைக்குக் கொண்டுவரப்படுமென எதிர்பார்க்கப்படுவதனுல் மீள்நடுகை நடவடிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்படும். ஏற்றுமதி வருவாய்கள் அதிகரிக்கும் சூழ்நிலையில் ஆண்டிற்கு 6000-7000 எக்டேயர் பரப்பளவிற்கு மீள்நடுகையை அதிகரிப்பதற்கான முயற்சிகளைத்தொடர்ந்து மேற்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும். இறப்பர்த்துறையின் எதிர்கால விளைவுகளை அதிகரிக்கும் தகுதி உற்பத்திச்செலவைக்குறைத்தல், உயர்விளைச்சல்தரும் வகைகளுடன் மீள்நடுகை செய்தல் ஆகியவற்றின் அடிப்படையில் தங்கியிருப்பதால் இவற்றிற்கு கூடியளவு முன்னுரிமை அளித்தல் மிகப்பொருத்தமானதாக இருக்கிறது. அரசதுறைத்தோட்டங்களுக்கு ஏக்கரொன்றிற்கு ரூ. 5,000 (எக்டேயரொன்றிற்கு ரூ. 12,350) ஆகவும் தனியார்துறைத் தோட்டங்களுக்கும் சிறுஉடமையாளர்களுக்கும் ஏக்கரொன்றிற்கு ரூ. 6,500 (எக்டேயருக்கு ரூ. 16,055) ஆகவும் இருந்த மீள்நடுகைக்கான உதவுதொகை இப்போதைய உயர்ந்த மீள் நடுகைச்செலவுகளைக் கருத்திற்கொள்கையில் போதியனவாக இல்லை. பின்னையது ஏக்கரொன்றிற்கு ரூ. 10,000 (எக்டேயருக்கு ரூபா 25,000) அளவில் இருக்குமென மதிப்பிடப்பட்டது. உதவுதொகைக்கொடுப்பனவு மிகவும் மதிநுட்பம் வாய்ந்தது போலத்தோன்றினுலும் நுணுகிநோக்கின் சிக்கலை அகற்றிவிடுவது இயலாததாகும்.

## அட்டவணை 1.10

## இறப்பர் புள்ளிவிபரங்கள் 1978—1980

| விடயம் | கூறு | 1978 | 1979 | 1980(அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப. இ. கி. கிறும்கள் | 156 | 153 | 133 |
| 2. பரப்பளவு | | | | |
| 2.1. பயிர்ச்செய்கைக்குட்பட்ட ... | '000 எ. டே. | 226.4 | 226.4 | 227.4 |
| 2.2. பால் வெட்டுதற்குட்பட்ட ... | '000 எ. டே. | 184.8 | 186.6 | 185.7 |
| 3. விளைச்சல் ... | கிலோ/எ. டே. | 845 | 820 | 716 |
| 4. வளமாக்கிப் பயன்பாடு ... | '000 மெ. தொ. | 21.0 | 23.5 | 21.4 |
| 5. மீளப்பயிரிடல் ... | எக்டேயர்கள் | 3,226 | 4,168 | 5,436 |
| 6. விலைகள் | | | | |
| 6.1. ஏற்றுமதிகள் க. எ. பெ. ... | கி. கிக்கு ரூபா. | 14.90 | 19.44 | 21.42 |
| 6.2. கொழும்பு ஆர். எஸ் எஸ்.1 ... | கி. கிக்கு ரூபா. | 6.92 | 9.15 | 10.62 |
| 7. உற்பத்திச் செலவு ... | கி. கிக்கு ரூபா. | 4.85 | 6.86(இ) | 8.20(இ) |
| 8. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கிறும்கள் | 138.0 | 128.2 | 120.9 |
| 9. உள்நாட்டு நுகர்வு ... | ப. இ. கி. கிறும்கள் | 9.1 | 10.6 | 14.9 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ. | 2,020.6 | 2,491.6 | 2,590.5 |
| | (சிஎஉ ப. இ.) | (103) | (124) | (120) |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தி % கூட்டப்பட்ட பெறுமதி (ஆ) ... | | 2.9 | 4.1 | 3.0 |

அ. தற்காலிகம் — மூலம்: இலங்கை மத்திய வங்கி.

ஆ. பயிர்வளர்த்தலிலும், பதனிடலிலும் மட்டும்

இ. உற்பத்திச் செலவின் சராசரி அளவீடு அரசதுறையின் அரச துறைப் பெருந் தோட்டங்கள், தனியார் துறைப் பெருந் தோட்டங்கள், சிறு உடைமையாளர்கள்

1979 நவெம்பரில் நடைமுறைக்கு வந்த ஒரு ஏக்கருக்கு ரூ. 2,700 (ஏக்டேயருக்கு ரூ. 6,670) என இருந்த புதிய பயிர்ச்செய்கை உதவுதொகைத்திட்டம் 1980இலும் மாற்றமின்றித் தொடர்ந்தது. 1980இல் 977 எக்டேயர்களாக இருந்த புதிதாக பயிரிடப்பட்ட பரப்பு முன்னைய ஆண்டிலும் பார்க்க 68 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக்காட்டுகின்றது. தற்போதைய உதவுதொகை புதியதாக பயிர்செய்வதற்காக ஏற்படும் செலவில் அரைப்பங்கிற்கும் குறைந்தஅளவிற்கே போதுமானதாக இருப்பதனல் புதிய பயிரிடலுக்கான தற்போதைய உதவு தொகை வீதம் போதியதற்றதாகக் காணப்படுகின்றது.

இறப்பர் மீள் நடுகை வரி நிதியத்தில் கிடைக்கத்தக்க பணத்தை அதிகரிப்பதற்கு 1980இல் இறப்பர் மீள்நடுகை வரியை ரூ. 0.35 இலிருந்து கிலோவொன்றிற்கு ரூ. 0.50 இற்கு உயர்த்தப்பட்டது. உயர்ந்தமட்ட மீள் நடுகையை ஏற்படுத்துவதற்காக உதவுதொகை மேலும் உயர்த்தப்பட்டிருக்குமாயின் உற்பத்தியாளருக்கு போதியளவு இலாப எல்லையைப் பேணுவதற்காக தீர்வையில் இது தொடர்பான சீராக்கலுடன் இணைந்து செல்லத்தக்க வகையில் மீள்நடுகைவரியும் அதிகரிக்கப்படல் வேண்டும்.

ம. தோ. அ. சபை, இ. அ. பெ. கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் உயர்ந்த சராசரிச் செலவுகளின் காரணமாக அவைகள் பாதகமான இலாபங்களைக்காட்டிய போதும் இக் கைத்தொழில் முழுமையான உற்பத்தியாளர் இலாபம் தொடர்ந்தும் சாதகமாகவே இருந்தது. லேற்டெக்ஸ் கிறேப்பின் குறைந்த விலைகள் குறிப்பாக கிறேப் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த முதன்மையான தோட்டங்களைப் பாதித்தன. கிறேப், தட்டை, இறப்பர் ஆகியவற்றில் காணப்பட்ட வேறுபாடு, தட்டை இறப்பர் உற்பத்திக்குச் சாதகமாக இருந்தமையால் கிறேப்பிலிருந்தும் தட்டை இறப்பர் உற்பத்தியை தொடங்குவதற்கு தூண்டுதலாக இருந்தது.

ஏறத்தாழ 30 சதவீதமான அரசதுறைத் தோட்டங்கள் இரண்டு வகையான செய்முறை வசதிகளையும் கொண்டிருக்கின்றன என மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இரண்டு வகையான செய்முறை வசதிகளையும் மேற் கொள்வதற்கு வரையப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் சிறு இடையூறுகள் எதுவுமின்றி பெருந்தோட்டங்கள் ஒரு உற்பத்தியிலிருந்து மற்ற உற்பத்திக்கு மாற்றிக் கொள்ள ஏதுவாக இருக்கும். இது விடயத்தில் அரசுடமையாக்கப்பட்ட தோட்டங்கள் தனிப்பாலினுலான லேற் டெக்ஸ் இறப்பரில் உற்பத்தி செய்வதற்குரிய சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வது பயனுடையதாக இருக்கும். சில ம. தோ. அ. சபைத் தோட்டங்கள் செய்முறை வசதிகளைக் கொண்டிருப்பதுடன் நாட்டின் தனிப்பாலினுலான லேற்டெக்சின் கிடைப்பனவை அதிகரிக்கச் செய்வதற்கு இவற்றின் இயலளவைப் பயன்படுத்தக் கூடியனவாகவும் இருக்கும். இப்பொழுது இங்கு உள்ளூர்தயாரிப்பு முயற்சிகள் தனிப்பாலினுலான லேற்றெக்சுடன் பெருமளவு கிடைக்கத்தக்க மூலப்பொருட் களையும் பயன்படுத்தி வருவதனுல் உள்ளூர், வெளிநாட்டு நிறுவனங்கள் இரண்டும் லேற்றெக்சை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிக்கான உற்பத்திகளில் முதலீடு செய்வதற்குத் தூண்டப்படுவதன் வாயிலாக இயற்கையை அடிப்படை யாகக் கொண்ட உற்பத்திக் கூறுகள் கூட்டப்பட்ட பெறுமதியை நாட்டிற்குள் ளேயே அதிகரிக்கலாம்.

1980ஆம் ஆண்டில் இறப்பர் இருப்புக்கள் ஏறத்தாழ 600 இலட்சம் கிலோக்கள் என இறப்பர் கட்டுப்பாட்டாளரால் மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் சில தனிப் பட்ட மதிப்பீடுகள் மொத்த இருப்புத் தொகையை ஏறத்தாழ 400 இலட்சம்கிலோக் களெனக் காட்டுகின்றன. நம்பத்தகுந்த இருப்பு எண்ணிக்கைகளின் முதன்மைத் தன்மைய திட்டமிடல் பொருளாதாரப் பகுப்பாய்வில் குறைவாக மதிப்பிடப் படக்கூடாது.

### தெங்கு

1980 ஆம் ஆண்டில் தெங்கு உற்பத்தி 20,260 இலட்சங்களென மதிப்பிடப் பட்டு முன்னைய ஆண்டிலும் பார்க்க 15 சதவீத வீழ்ச்சியை எடுத்துக்காட்டுகின் றது. இதன்படி உற்பத்தியின் அதிகரித்த போக்கில் ஒரு பின்னடைவு கடந்த இரண்டு ஆண்டுகளிலும் நோக்கப்பட்டதுடன் சராசரி 25,000 இலட்சம் காய் களுக்கும் விஞ்சிக் காணப்பட்டது. இச்செயலாற்றம் எழுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் பதிவு செய்யப்பட்ட உற்பத்தி மட்டங்களுக்கும் கீழேயே இருந் தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி 1979 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்று மதி செய்யப்பட்ட மிகைகளை ஏறத்தாழ 3,900 இலட்சம் காய்களாகக் குறைத் தது. 1979ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 1980ஆண்டின் முற்பகுதியிலும் நாட் டில் நிலவிய வரட்சி தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட இக்கணிசமான வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது.

அண்மையஆண்டுகளாக வளமாக்கிப்பயன்பாட்டு மட்டத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுகின்றதெனினும் தெங்கு நிலங்களில் வளமாக்கிப் பயன்பாடு தொடர்ந்தும் விதந்துரைக்கப்பட்ட அளவிற்கு கீழேயே இருக்கின்றது. 1980 ஆம் ஆண்டில் வளமாக்கிப் பயன்பாடு மிகச்சார்பான வானிலை நிலைமைகளுடன் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து அதிகரித்தது. தென்னைத்துணைத்துறைக்கான வளமாக்கி வழங்கல் 1980ஆம் ஆண்டில் 55,800 மெற்றிக் தொன்களாக விளங்கி முன்னைய ஆண்டினைக்காட்டிலும் 12 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. வள மாக்கி உதவுதொகை 1980ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைமுறையிலிருந்து, உயர்கின்ற வளமாக்கி விலைகளுக்கெதிராக உற்பத்தியாளர்களை பாதுகாத்தது.

1979ஆம் ஆண்டின் தொடக்கப்பகுதியிலிருந்தும் தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம் அரசுடைமையாக்கப்பட்ட இரண்டு வங்கிகளினுல் செயற்படுத்தப்பட்டமை 1980இல் வளமாக்கிப்பயன்பாடு அதிகரிக்கஉதவியது.

1979 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட புதியநடுகை மீள்நடுகைக்கான உதவுதொகைகளின் அதிகரிப்பு 1980ஆம்ஆண்டின் பயிரிடல், நடவடிக்கையை ஊக்குவித்துள்ளதுபோல் தோன்றுகின்றது. மீள்நடுகை செய்யப்பட்ட, புதிதாகப் பயிர்செய்யப்பட்ட மொத்தப் பரப்புக்கள் 2,742 எக்டேயர்கள், 2,089 எக்டேயர்களாக அமைந்து முறையே 59 சதவீதம், 80 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. மீளாய்விற்குரிய ஆண்டில் ஏறத்தாழ 13,000 எக்டேயர்கள் கொண்ட தெங்கு நிலம் மீள நன்னிலைக்குக் கொண்டுவரப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டிலும் பார்க்க ஏறத்தாழ இரண்டு மடங்கானதாகும். தென்னைத் துணைத்துறையில் பயிரிடல், மீள் நன்னிலைக்குக் கொண்டுவருதல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு குறிப்பாக கடந்த பல ஆண்டுகளாக உற்பத்தி செய்யப்படாமல் இருந்த பெருமளவு தெங்கு நிலங்களின் அடிப்படையில்நோக்குகையில் வரவேற்கத்தக்க அபிவிருத்தி காணப்பட்டது. மீள்நடுகைக்காகவும், புதிய நடுகைக்காவும் 1980ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உதவுதொகைகள் 1979 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட ரூ. 17லட்சம், ரூ. 25 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் முறையே ரூ. 34 இலட்சமாவும், ரூ. 7 இலட்சமாகவும் விளங்கின. 1980இல் மீள நன்னிலைக்குக் கொண்டுவருவதற்காக கொடுக்கப்பட்ட உதவுதொகை 1979ஆம் ஆண்டின் ரூ. 28 இலட்சங்களுக்கெதிராக ரூ. 67 இலட்சங்களாக இருந்தது. 1979 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட தெங்குநிலங்களில் இடையே பயிர்களைச் செய்வதற்கான அதிகரித்த உதவுதொகைகான ஆர்வம் வரவேற்கத்தக்கதாகக் காணப்பட்டது. 1979ஆம் ஆண்டின் 306 எக்டேயர்களுக்கெதிராக 1980இல் 573 எக்டேயர் தெங்கு நிலங்களில் இடையே பயிர் செய்யப்பட்டது.

1980ஆம் ஆண்டின் வரட்சியின் விளைவால் காய்களின் வழங்கலில் ஏற்பட்ட வீழ்ச்சி தேங்காய்த்துருவல் (தேது), தேங்காயெண்ணெய் ஆகியவற்றின் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. தேங்காய்த்துருவலின் உற்பத்தி மின்வெட்டு நடவடிக்கையினுலும் பாதிக்கப்பட்டது. மறுபுறத்தில் 1980 ஆம் ஆண்டின் தொடக்கப் பகுதியில் தேங்காய்துருவலின் உற்பத்தி குறைந்தமைக்கு ஏற்றுமதிகளில் ஊக்கத்தினைக் கெடுக்கக் கூடியவாறு மிகவும் உயர்ந்தமட்டங்களில் ஆகக்குறைந்த க. ஏ.பெ. விலைகள்மேலாண்மையாளர்களால் பேணப்பட்டமையும் ஒரு காரணமாக இருந்தது. ஆண்டின் பின்னரைப் பகுதியில் ஆகக்குறைந்த க. ஏ. பெ. விலைகளில் ஏற்படுத்தப்பட்ட குறைப்பு உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் அதிகரிப்பு ஏற்பட வழிவகுத்தது. இலங்கை இலாபத்தைப் பேணிவருகின்றதெனினும் தேங்காய்த் துருவலுக்குக் கடுமையான போட்டியை எதிர்நோக்குவது தவிர்க்க முடியாததாகும். வெளிநாட்டுச் செலாவணிவருவாய்களில் முக்கிய மூலமாக இருக்கும் இதனை, உற்பத்தி, சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஏற்படும் தலையீடுகள் வெகுவாகத் தாக்கும். கடந்த காலத்தில் நாட்டின் புதிய தேங்காய்த்துருவல் ஆலைகளைத் திறப்பதில் பேணப்பட்டுவந்த கடுமையான, கட்டுப்பாடுகளால் இருந்த பழமை வாய்ந்த ஆலைகள் தொழிற்பாடுகளிலிருந்து தவிர்த்துக்கொண்டமையின் காரணமாக உற்பத்தி இயலளவில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் தேங்காய்த்துருவல் ஆலைகளுக்கு இக்கொள்கை மூலம் சில பாதுகாப்பு வழிமுறைகள் வழங்கப்பட்டனவெனினும் இவைகள் இக்கைத் தொழிலைப் புத்தாக்கட்செய்வதில் நீண்ட கால நன்மைகளைக் கருத்திற் கொள்ளவில்லை. எனினும், தெங்குக் கைத்தொழில் அமைச்சு புதிய தேங்காய்த்துருவல் ஆலை

களைத்திறப்பதற்கான விண்ணப்பங்களை அண்மையில் கவனத்தில் கொண்டமை குறிப்பிடத்தக்க ஊக்குவிப்பாகும். தேங்காயெண்ணெயைப் பொறுத்தவரை, ஆண்டு முழுவதிலும் தொடர்ந்து காணப்பட்ட முற்றான ஏற்றுமதித் தடையும், வரட்சி காரணமாக காய் வழங்கலில் குறைந்த மட்டமும் இணைந்து உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை ஏற்படுத்தின.

அட்டவணை 1.11
**தெங்கு புள்ளிவிபரங்கள் 1978 - 1980**

| விடயம் | கூறு | 1978 | 1979 | 1980(அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (ஆ) ... | ப.இ. காய்களில் | 2,207 | 2,393 | 2,026 |
| 1.1 தேங்காய்த் துருவல் ... | ப இ. காய்களில்(இ) | 283 | 272 | 217 |
| 1.2 தேங்காய் எண்ணெய் ... | ப.இ. காய்களில்(இ) | 641 | 803 | 500 |
| 1.3 உலர்த்திய தேங்காய் (ஈ) ... | ப இ.காய்களில் (இ) | 5 | 5 | 1 |
| 1.4 தேங்காயின் உள்நாட்டு நுகர்வு ... | ப.இ. காய்களில் (உ) | 1,278 | 1,302 | 1,326 |
| 2. சராசரி விலை ... | | | | |
| 2.1 கொழும்பு ... | காய்க்கு ரூபா. | 0.85 | 1.00 | 1.48 |
| 2.2 ஏற்றுமதிகள் கூ. ஏ. பெ. ... | காய்க்கு ரூபா. | 1.85 | 2.40 | 3.13 |
| 3. வளமாக்கி வழங்கல் ... | 000' மெ. தொ. | 42.6 | 49.7 | 55.8 |
| 4. உற்பத்திச் செலவு ... | காய்க்கு ரூபா. | 0.33 | 0.37 | 0.40 |
| 5. ஏற்றுமதி வருவாய்கள் .. | ரூ. ப. இ. | 1,271 | 1,699 | 1,234 |
| | (சிஎஉ. ப. இ.) | (65) | (84) | (57) |
| 5.1 உள்ளீட்டு உற்பத்திகள் ... | ரூ. ப. இ. | 972 | 1,298 | 754 |
| | (சிஎஉ. ப. இ.) | (50) | (64) | (35) |
| 5.2 ஏனைய உற்பத்திகள் ... | ரூ. ப. இ. | 299 | 401 | 480 |
| | (சிஎஉ. ப. இ.) | (15) | (20) | (22) |
| 6. மொ. உ. உற்பத்தி % கூட்டப்பட்ட பெறுமதி (ஊ) ... | — | 5.2 | 4.9 | 5.1 |

(அ) தற்காலிகம் — மூலம்: இலங்கை மத்திய வங்கி
(ஆ) மதிப்பீடு
(இ) காய்க்கு சமமாக மாற்றப்பட்டுள்ளது – 1 மெற். தொன் தேங்காய்த் துருவல் = 6800 காய்கள்
– 1 மெற். தொன் எண்ணெய் = 8000 காய்கள்
– 1 மெற். தொன் உலர்த்திய தேங்காய் = 4925 காய்கள்
(ஈ) ஏற்றுமதி மட்டும்
(உ) உற்பத்திசெய்தலும் பதனிடலும் மட்டும்
(ஊ) ஆண்டிற்கு தலைக்குரிய நுகர்வு 90 காய்கள் என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.

காய்களின் குறைந்த வழங்கலால் உள்ளூர் சந்தையில் காய்களின் விலைகள் அதிகரிக்க வழிவகுத்தமையே 1980 ஆண்டின் பண்பாக இருந்தது. மேலும் உள்ளூர் விலைகளின் அதிகரிப்பினைத் தடுப்பதற்கு போதுமான உள்நாட்டுவழங்கலை உறுதிசெய்தல், தேங்காய்த்துருவல் தவிர்ந்த காய்கள் உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதிகள் மீது மேலாண்மை சபைகள் கடுமையான ஒழுங்குவிதிகளை விதித்தது. இதனால் 1979 ஆம் ஆண்டில் இயலத்தக்கதாக இருந்த கட்டுப்பாடுகள், ஒழுங்குவிதிகளின் தளர்வு 1980 ஆம்ஆண்டில் முற்றாக வலுவிழந்தது. எனினும் முன்பு ஒரு காய்க்கு ரூ. 1 என்ற இலக்கு விலையுடன் ஒப்பிடுகையில் உற்பத்தியாளர்காயொன்றிற்கு ரூ. 1.25 என்ற உயர்விலையைப் பெறுவதை இயலச் செய்வதற்காக 1980 யூனில் நிருவாகத்தீர்வைகளின் திருத்தத்தின்மூலம் உற்பத்தியாளர்களுக்குச்சில சலுகைவழிமுறைகள் வழங்கப்பட்டன. நிர்வாகத் தீர்வையைக்கணிக்கும் பொழுதும் உயர்ந்து செல்லும் உற்பத்திச் செலவுகளைக் காலத்திற்குக்காலம் கவனத்தில்கொள்ளுதல்வேண்டும்.

முன்னைய ஆண்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டது போன்று கைத்தொழிலின் நீண்டகால அபிவிருத்தி, உற்பத்தியாளர் நுகர்வோர் இரு சாராருக்கும் ஊறு

நேராதவாறு இருவர் நலன்களையும் பேணிக் காத்தலிலேயே தங்கியுள்ளது. உண்மையான மட்டத்தில் நுகர்வோர் விலைகளை வைத்திருப்பது இன்றியமையாததாகஇருக்கும் வேளையில் இத்துறையில் தேக்கமோ அல்லது வீழ்ச்சியோ ஏற்படுவதைத் தடுப்பதற்கு தெங்குத் துணைத்துறையில் முதலீட்டை ஊக்குவிப்பதும் வேண்டியதொன்றாகும். இக்கொள்கைகள் இன்னமும் நுகர்வோரின் தேவைகளைத் திருப்திப்படுத்தும் போக்கினையே முதன்மையாகக் கொண்டிருந்தமையை 1980ஆம் ஆண்டின் அபிவிருத்திகள் காட்டுகின்றன. உற்பத்தியை விரிவுபடுத்துவதன்மூலம் மட்டுமே நுகர்வோர் நலன்களுக்கு நீண்டகாலத்தில் தீர்வுகாணமுடியும்.

சிறு ஏற்றுமதிப்பயிர்கள்

பெருமளவு பல்வேறு இடங்களில் பயிர்ச்செய்கை அலகுகளாக அதாவது ''கலப்புத் தோட்டங்களாக'' அல்லது வீட்டுத் தோட்டங்களாகக் காணப்பட்டமையே சிறு ஏற்றுமதிப்பயிர்களின் பண்பாக இருக்கின்றது. இதனால் உற்பத்தி அளவுகள் மீதான சரியானதரவு எளிதாகக் கிடைக்கவில்லை. எனினும் இந்த விடயங்கள் பலவற்றில் உள்நாட்டு நுகர்வு மொத்த உற்பத்தியில் ஒருசிறு அளவாகவே உள்ளமையால் ஏற்றுமதிகளின் அளவு உற்பத்தியினைக் கணிப்பதற்கு ஒரு மாற்றுவழியாகக் கொள்ளலாம்.

ஏற்றுமதியளவின் அடிப்படையில் பாக்கு, ஏலம், கறுவா ஆகியவற்றின் உற்பத்தி 1980ஆம் ஆண்டில் கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தன. எண்ணெய் விதைகள், கொக்கோ உற்பத்திகள், கடுகு, மரமுந்திரிகை ஆகியனவும் 1979ஆம் ஆண்டைவிட அதிகரித்தன. மறுபுறத்தில் கோப்பி, மிளகு, சாதிப்பத்திரி, சாதிக்காய், எள்ளு, வெற்றிலை, புகையிலை, பப்பாளி, இன்றியமையாத எண்ணெய் விதைகள் ஆகியவற்றின் ஏற்றுமதி அளவுகள் குறைவைப் பதிவு செய்தன. எனினும், இப்பயிர்களின் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட வெளிப்படையான வீழ்ச்சிக்கு உள்நாட்டு நுகர்வு அதிகரித்தமை, பொதுவாக உற்பத்தியைப் பாதித்த பாதகமான வானிலைபோன்ற காரணிகளும் உதவியிருக்கலாம்.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் உதவித்திட்டத்தின் கீழ் 1980ஆம் ஆண்டில்மொத்தமாகப் பயிரிடப்பட்ட பரப்பளவு முன்னைய ஆண்டிலும் பார்க்க சிறியளவு அதிகரிப்பை மட்டுமே பதிவு செய்தது. பயிரிடப்பட்ட பரப்பில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு ஏலக்காய் விடயத்தில் மட்டுமே காணப்பட்டது. 1979ஆம் ஆண்டு 202 எக்டேயர்களுடன் ஒப்பிடுகையில் 1980 இல் 387 எக்டேயர்கள் பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டுவரப்பட்டன.

நெல்

1980ஆம் ஆண்டில் நெற்றுறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மகிழ்ச்சிக்குரியதொன்றாகவும் எதிர்காலத்தில் தன்னிறைவு அடைவதற்கான வாய்ப்புக்களை உண்டாக்குவதாகவும் காணப்படுகிறது. பொருளாதாரம் நெல் உற்பத்தியில் தன்னிறைவினை அடையும் நிலைக்கு வெகு அருகில் உள்ளது.

குடிமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களம் 1980 இல் நெல் உற்பத்தி 21 இலட்சம் மெற்றிக் தொன்கள் (1,022 இலட்சம் புசல் நெல் அல்லது 15 இலட்சம் தொன் அரிசி) என மதிப்பிட்டதுடன் இது முன்னைய ஆண்டிலும் பார்க்க 11 சதவீத அதிகரிப்பையும் கொண்டிருந்தது. 1979-80 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி 15 இலட்சம் மெற்றிக் தொன் (696 இலட்சம் புசல்கள்) என மதிப்பிடப்பட்டு 4.3 சதவீத அதிகரிப்பைக் காட்டியவேளையில் 1980 ஆம் ஆண்டின் சிறு போக உற்பத்தி 7 இலட்

சம் மெற்றிக் தொன்களாக (326 இலட்சம் புசல்கள்) மதிப்பிடப்பட்டு 30 சத வீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. நெல்லின் கவர்ச்சியான திறந்த சந்தை விலைகள், குறிப்பாக கலவெவப் பகுதியில்.பயிர் செய்யப்பட்ட பரப்பளவு விரிவடைந்தமை, நெல் உற்பத்தியில் இவ்விரும்பத்தக்க அதிகரிப்பிற்கு உதவிய முதன்மைக்காரணிகளாக இருந்தன. விளைவும் 1979ஆம் ஆண்டில் எக்டேயர் ஒன்றிற்கு 2,750 கிலோக்களாக (ஏக்கரொன்றிற்கு 53 புசல்கள்) இருந்து, 1980ஆம் ஆண்டில் எக்டேயர் ஒன்றுக்கு 2,927 கிலோக்களாக (ஏக்கரொன்றிற்கு 56புசல்கள்) குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு வளமாக்கிப் பயன்பாடு, சிறப்பான பண்டைய நடைமுறைகள் கூடியளவு விரிவுபடுத்தப்பட்ட பணிகள் சார்பான வானிலை நிலைமைகள் ஆகியனவே பெருமளவு காரணமாகும். 1980ஆம் ஆண்டில் விதைக்கப்பட்ட மொத்தப்பரப்பு முன்னைய ஆண்டிலும் பார்க்க 6,000 எக்டேயர்களால் அல்லது 1 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வாண்டில் குறைவான பயிர் இழப்புக்களே காணப்பட்டன. விதைக்கப்பட்டதற்கும், அறுவடை செய்யப்பட்டதற்கும் இடையிலுள்ள பரப்பளவு வேறுபாடு முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 56,000 எக்டேயர்கள் அல்லது 6.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1980இல் 29,000 எக்டேயர்களாக அல்லது விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பில் 3சத வீதமாக இருந்தது.

நெல் துணைத்துறைக்கான வளமாக்கி வழங்கல் 1979இல் 73,603 மெற்றிக் தொன்களிலிருந்து 1980இல் 145,110 மெற்றிக்தொன்களுக்கு ஏறத்தாழ இரண்டுமடங்காகியது. இதனால் 1979ஆம் ஆண்டு செத்தெம்பரில் அறிவிக்கப்பட்ட அதிகரித்த உதவு தொகை 1979/80 பெரும்போகம் 1980 சிறுபோக காலங்களில் அதிகரித்த வளமாக்கிப் பயன்பாட்டில் 1978இல் இருந்ததிலும் பார்க்க 35 சதவீதம் கொண்ட விரும்பத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.வளமாக்கி பயன்பாட்டின் பெருமளவு அதிகரிப்பு குருநாகல், அம்பாறை, யாழ்ப்பாண மாவட்டங்களில் அறிவிக்கப்பட்டது. எனினும் இதற்கு மாறாக முதன்மையான நெல் உற்பத்தி மாவட்டங்களாக பொலனறுவை, அநுராதபுரம் மாவட்டங்களில் வளமாக்கிப் பயன்பாட்டில் கணிசமான வீழ்ச்சி காணப்பட்டது. பெரும்போகம் சிறுபோகம் ஆகிய இரண்டு பருவகாலங்களிலும் குருநாகல் அம்பாறை கொழும்பு உடவளவைப் பகுதி ஆகிய மாவட்டங்களின் விளைச்சலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது.

அட்டவணை 1.12

**நெல் புள்ளி விபரங்கள் 1979-80**

DISCARDED

| விடயம் | கூறு | 1979 | | | 1980 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத் தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத் தம் |
| விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பு | '000 எக்டேயர் | 578 | 261 | 839 | 574 | 271 | 845 |
| வளமாக்கி வழங்கல்கள் .. | '000 மெ. தொன் | 44 | 30 | 74 | 92 | 53 | 145 |
| வழங்கப்பட்ட கொடுகடன் ... | ரூ. ப. இ. | 60 | 14 | 74 | 46.0 | 14 | 60 |
| திருந்திய விதைகளின் கீழான பயிர்ச்செய்கை ... | '000 எக்டேயர் | 448 | 200 | 648 | 487 | 196 | 683 |
| அறுவடை. செய்யப்பட்ட பரப்பளவு | '000 எக்டேயர் | 551 | 232 | 783 | 555 | 261 | 816 |
| எக்டேயருக்கான விளைச்சல் .. | கி. கிறாம்கள் | 2,819 | 2,574 | 2,750 | 2,950 | 2,886 | 2,927 |
| உற்பத்தி ... | '000 மெ. தொன் | 1,393 | 524 | 1,917 | 1,453 | 680 | 2,133 |
| உ. வி. தி. கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை .. | '000 மெ. தொன் | 464.3 | 76.9 | 541.2 | 210.5 | 0.8 | 211.3 |
| இறக்குமதிகள் (நெல்லிற்குச்சமன்) | '000 மெ. தொன் | 168 | 136 | 304 | 176 | 134 | 310 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பயிர் செய்யக்கூடிய நிலத்தின் பற்றுக்குறையை கருத்திற்கொண்டு திறமையான வேளாண்மை அபிவிருத்திகளில் ஓர் அலகு நிலத்திற்கான உற்பத்தியை அதிகரிப் பதற்கு கூடிய முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். இவ்விடயத்தில் போதுமான அளவு ஊக்குவிப்புக்களும், முறையான வளமாக்கிப் பயன்பாடும் வலியுறுத்தப் படவேண்டும். வழங்கப்பட்ட உள்ளீடுகள், வசதிகள் ஆகியவற்றின் ஆகக்கூடிய பயன்பாட்டை பாதுகாப்பதற்கு ஏனைய துணைப்பணிகளும் பேணப்படவேண்டும்.

உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெ.ச.ச.வின் நெல் கொள்வனவுகள் 1980ஆம் ஆண்டில் 50 சதவீதத்திற்கு மேலாக வீழ்ச்சியடைந்தன. 1980ஆம் ஆண்டில் நெ.ச.ச.வினுல் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லில் ஏறத்தாழ 98 சத வீதம் ஆண்டின் முன்னரைப்பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்டது. சிறுபோக நெற்செய்கையிலிருந்தும் நெ.ச.ச.வினுல் செய்யப்பட்ட கொள்வனவுகள் ஏறத் தாழ 772 மெற்றிக் தொன்களாக (37,000 புசல்கள்) அல்லது முன்னைய சிறு போக காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தொகைகளில் 1 சதவீதமாக இருந் தது. முன்னைய ஆண்டுகளில் இருந்த சூழ்நிலையின் காரணமாக நெ.ச.ச. உலர் வலய மாவட்டங்களில் குறிப்பாக அனுராதபுரம், மன்னுர், அம்பாறை, பொல னறுவை ஆகியவற்றில் பெருமளவு நெல்லைக் கொள்வனவு செய்தது.

பெரும்பாலும் 1980ஆம் ஆண்டு யூனில் இருந்து நெ.ச.ச. கணிசமான கொள் வனவுகளை மேற்கொள்வதற்கு, தனிப்பட்ட வர்த்தகரிடமிருந்து தோன்றிய கடுமை யான போட்டியின் காரணமாக அதிகரிக்கின்ற இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியது. 1980ஆம் ஆண்டு நவெம்பர் வரை நெல்லின் உத்தரவாத விலை ஒரு புசலுக்கு 40 ரூபாவாக இருந்தவேளையில் சனவரி - யூன் காலத்தில் நெல்லிற்கான சராசரி திறந்த சந்தைவிலைகள் மொத்தமாக 46 ரூபாவாக இருந்தது. 1980 நவெம்பரில் நெ.ச.ச. அதன் கொள்வனவு விலையை புசலுக்கு ரூ. 50 இற்கு உயர்த்தியபோது பெரும்பாலான மாவட்டங்களில் ஒரு புசலுக்கான திறந்த சந்தை விலை மேலும் மேல்நோக்கி உயர்ந்து ரூ. 60 ஐயும் விஞ்சியது.

நெ.ச.ச. விற்பனை செய்யும் அரிசியின் விலைகள் திறந்த சந்தை விலைகளிலும் பார்க்கக் கணிசமானளவு குறைவாக இருந்தமையால் நெ. ச. ச. வின் அரிசி விற்பனை கள் அதாவது அதன் சொந்த விற்பனை நிலையங்களுக்கூடாக மேற்கொள்ளப்பட்ட விற்பனைகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. பொதுவான விலை மட்டங்கள் இருக்கும்போது உள்ளடக்கிய வேளாண்மை உள்ளீடுகளின் விலைகள் அதிகரித்துக் கொண்டிருந்த நேரத்தில் நெ.ச.ச. வினுல் சந்தை தனியுரிமையாக்கப்பட்டிருக்கு மாயின் தற்போது நிலவும்மட்டத்தில் உற்பத்திகளையும் உண்மை வருமானத்தையும் அதே அளவில் பேணுவதற்கு வேளாண்மையாளர்கள் இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருந்திருக்கும். நெ.ச.ச. வின் தொழிற்பாட்டுப் பங்கு 1980ஆம் ஆண்டில் வியக்கத்தக்க முறையில் மாற்றமடைந்தது. எனினும், குறைந்தளவு விலையினை தொழிற்படுத்துபவராக செயலாற்றிய நெ.ச.ச.வின் முதன்மைப்பங்கைக் குறைவாக மதிப்பிடக்கூடாது. முன்னைய ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு நெல், அரிசிச் சந்தையில் ஏற்பட்ட சிறப்பான மாற்றங்களின்போது ஒரே தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மாறி மாறிச் செய்வதைத்தவிர்க்கும் பொருட்டு பரப்பினைக் குறைக்கும் நோக்கில் நெல்/அரிசி சந்தைப்படுத்தலில் ஈடுபட்டிருந்த அரசுடமை நிறுவனங்கள் திரும்ப அமைக்கப்பட்டு, ஒருமுகப்படுத்தப்பட்டு நெல் அரிசி சந்தைப் படுத்தலில் முழுச்செயற்பாடுகளும் அவற்றின்மூலம் பங்கீடு செய்யப்படுவது உகந்ததாகும்.

**சீனி**

இலங்கைச் சீனிக்கூட்டுத்தாபனத்தின் சீனி உற்பத்தி 1980ஆம் ஆண்டில் 26,300 மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டு 1979ஆம் ஆண்டின் உற்பத்தி யுடன் ஒப்பிடுகையில் 43 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இங்குராண, கந்தளாய் தொழிற்சாலைகளின் உற்பத்திகள் முறையே 28 சதவீத, 60 சதவீத அதிகரிப்புக்களைக் காட்டின.

இங்குராணவில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு 9 சதவீத வீழ்ச்சியைக் காட்டியபோதிலும் இங்கு கரும்பு பயிரிடப்பட்ட பரப்பு கூடிக்குறையாமல் கடந்த ஆண்டினளவினதாகவே இருந்தது. எனினும் தண்ணீர் பெருமளவு கிடைக்கத்தக்க தாக இருந்தமை 1978இல் சூறுவளியினுல் கடுமையான பாதிப்புக்களிலிருந்தும் உற் பத்தி திரும்பவும் நன்னிலை அடைந்தமை, சிறப்பான முகாமை ஒழுங்குகள் 1979இல் 41 மெற்றிக் தொன்னுக இருந்த சராசரி உற்பத்தியை 1980இல் எக்டேயருக்கு 57 மெற்றிக் தொன்னுக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து, கரும்பு அறுவடையில் கணிசமான அளவு அதிகரிப்பை விளைவித்தன.

கந்தளாயில் பயிரிடப்பட்டதும் அறுவடை செய்யப்பட்டதுமான பரப்பளவு ஏறத்தாழ கடந்த ஆண்டின் அளவினதாகவே காணப்பட்டது. எனினும் 1979 இல் 39 மெற்றிக் தொன்களிலிருந்து 1980 இல் ஏக்கருக்கான விளைவு 51 மெற்றிக் தொன் களுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமை அறுவடை செய்யப்பட்ட கரும்பில் 32 சதவீத அதிகரிப்பை விளைவித்தது. பெருமளவிற்கு கிடைக்கத்தக்கதாய் இருந்த மகாவலி நீருடன் இணைந்து திருந்திய முகாமை, வழமையான பயிர்ச்செய்கை முறைகள் காணப்பட்டமையும் கந்தளாயில் சிறந்த செயலாற்றம் காணப்படக் காரணமாக இருந்தது.

இவ்வாண்டில் சீனியை மீளப்பெறும் அளவுகள் குறிப்பிடப்பட்டது போலவே தொழிற்சாலைகளின் திறமையான தொழிற்பாடு குறைவாக இருந்தும் விரும்பத் தக்க அளவு முன்னேற்றமடைந்ததாகத் தோன்றுகின்றது. எனினும் சீனியில் மீள்நன்னிலை அடையும் வீதங்கள் முதன்மையான சீனி உற்பத்தி நாடுகள் அடைந் துள்ள சிறப்பான எல்லைக்கு மிகக்கீழேயே இன்னும் இருக்கின்றது. மீள் நன்னிலை வீதங்களின் அபிவிருத்தி குறைந்த செலவில் உயர்ந்த வெளியீட்டை இயலச் செய்யும்.

**சிறு உணவுப்பயிர்கள்**

கடந்த கால நிலைமைகளுக்கு மாறுக 1980 ஆம் ஆண்டில் சிறு உணவுப்பயிர் களின் உற்பத்தி அதிகரித்தது. பம்பாய் வெங்காயம், மரவள்ளி, சோளம் தவிர்ந்த பெரும்பாலும் சிறு உணவுப்பயிர்களுள் பயிரிடப்பட்ட பரப்பளவு அதிகரிப்பைக் காட்டியது. இது இப்பயிர்களின் உயர்ந்த உற்பத்தியை விளைவித்தது.

1980இல் சிறுவேளாண்மை பயிர்த்துறையால் அடையப்பெற்ற மீள்நன்னிலைக்கு மா, பாண் ஆகியவற்றின் விலைகளின் மேல் நோக்கிய சீராக்கமும் முதன்மைக் காரணமாக இருக்கும். இது இப்பயிர்களின் உற்பத்தியை வருவாய்மிக்கதாக்கியது. வளமாக்கி உதவுதொகைகள் அதிகரிக்கப்பட்டதற்கு ஈடுகொடுக்கும் வகையில் சிறு உணவுப்பயிர்த்துறையின் வளமாக்கிப்பயன்பாடும் அதிகரித்தது.

**மீனும் கால்நடையும்**

கடற்றெழில் அமைச்சின் தற்காலிக மதிப்பீடுகளின்படி 1980 ஆம் ஆண்டில் மீனுற்பத்தி 183,291 மெற்றிக் தொன்களாக இருந்து 1979 ஆம் ஆண்டின்

தேறிய உற்பத்தியிலும் பார்க்க 9 சதவீத அதிகரிப்பைக்காட்டியது. இவ்வதிகரிப்பிற்கு உதவிய முதன்மைக் காரணங்களுள் பொறிமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெருமளவு எண்ணிக்கைகொண்ட பொறிமயப்படுத்தப்பட்ட படகுகள் வழங்கப்பட்டமை மீன்பிடிக்கருவிகள் ஏனைய உள்ளீடுகளின் வழங்கலின் கிடைப்பனவு பெருமளவிற்கு அதிகரித்தமை ஆகியனவும் அடங்கும். பொறிமயப் படுத்தல், சூறுவளி மீள்நன்னிலைப்படுத்தல் திட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட உயர்ந்த மட்ட உதவுதொகைகளும் இன்னெரு உதவுகாரணியாக இருந்ததுடன் இத்தொகை 1980 இல் ரூ. 555 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட உதவுதொகையிலும் பார்க்க ஏறத்தாழ 43 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் 1980இல் பால் உற்பத்தி (எருமைப் பாலும் உட்பட) 2,830 இலட்சம் இலிற்றர்கள் எனத் தற்காலிகமாக மதிப்பிட்டதுடன், இது 1979ஆம் ஆண்டு உற்பத்தியைவிட 9 சதவீத அதிகரிப்பையும் கொண்டிருந்தது. எனினும் நாட்டின் மொத்தப்பால் உற்பத்தியில் சராசரி 25 சதவீதத்திற்கு வகைகூறும் எருமைப்பால் உற்பத்தி முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 1980இல் 5 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. தேசிய பாற்சபையால் 1980 இல் சேகரிக்கப்பட்ட 618 இலட்சம் லிற்றர் கொண்ட பால் கடந்த ஆண்டினதை விட சிறிதளவு வீழ்ச்சியை பதிவுசெய்தது. தே. பா. சபையினுல் சேகரிக்கப்பட்ட பாலில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பெரும்பாலும் நிறுவனத்தில் நிலவிய கைத்தொழில் தகராறுகள், பால் சேகரிப்பு சூழலில் தனியார்துறையிலிருந்து தோன்றிய ஓரளவு அதிகரித்த போட்டி ஆகியன காரணங்களாக இருந்தன.

குடிமதிப்புப்புள்ளிவிபரத் திணைக்களத்தினுல் மேற்கொள்ளப்பட்ட தற்காலிக தரவுகளின்படி 1980ஆம் ஆண்டில் முட்டை உற்பத்தி 5,440 இலட்சங்களாக இருந்து முன்னைய ஆண்டைக்காட்டிலும் 26 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இவ்வதிகரிப்புக்கு சில பெரியளவு கோழிப்பண்ணைகள் தோன்றியமை, குறிப்பாக செத்தெம்பர்வரை நிலவிய கவர்ச்சியான தீன் விலைகள் ஆகியவற்றை பெருமளவு விளக்கமாகக் குறிப்பிடலாம்.

**கிராமக் கொடுகடன்**

அனைத்தையும் உள்ளடக்கிய கிராமக் கொடுகடன் திட்டத் (அ.உ.கி.கொ) தின் கீழும் கிராம வங்கித்திட்டம் வேளாண்மைப் பணிநிலையங்களிலுள்ள இலங்கை வங்கித்துணை அலுவலகங்களின்கீழும் கிடைக்கச்செய்யப்பட்ட கொடுகடன் தொகை 1980 ஆம் ஆண்டில் ரூ. 1,019 இலட்சத்திற்கு 4 சதவீதத்தால் வீழ்ந்தது. 1980 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கிராமக் கொடுகடன்மட்டம் 1979ஆம் ஆண்டில் குறிப்பிட்ட கடுமையான வீழ்ச்சியிலிருந்து மேலும் மோசமான நிலையை எடுத்துக்காட்டியது. 1979 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கொடுகடனின் அளவு 1978 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டஅளவைவிட 67 சதவீதம் குறைவானதாகும். 1980 ஆம் ஆண்டிலும் பயிர்செய்கைக்கான கடன்கள் வழங்கப்பட்ட கடன்களின் பெரும்பங்கிற்கு வகைகூறின. இவ்வாண்டில் வழங்கப்பட்ட எல்லாக்கடன்களிலும் ரூ. 589 இலட்சங்களை அல்லது 58 சதவீதத்தை வழங்கியதன் மூலம் மக்கள் வங்கியும் அதனுடன் கிராமவங்கிகளும் சேர்ந்து நாட்டின் கிராமத்துறைக்கான கடன் வழங்கல் நிறுவனங்களில் முதன்மையானவையாக தொடர்ந்தும் இருந்தன. 1979 இல் கிராமத் துறைக்கு வழங்கப்பட்ட கடன்களில் 30 சதவீதத்திற்கு வகைகூறிய கிராம வங்கிகள் 1980 இல் தமது பங்கை 39 சதவீதத்திற்கு அதிகரித்தன. இவ்வாண்டில் வழங்கப்பட்ட எல்லாக்கடன்களிலும் ஏறத்தாழ ரூ. 430 இலட்சத்தை அல்லது 42 சதவீதத்தை இலங்கை வங்கி வழங்கியது. அ.உ.கி.கொ.தி. கீழ் வழங்கப்பட்ட பயிர்செய்கைக் கடன்களின் விபரம் புள்ளிவிபரப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

## அட்டவணை 1.13

### கிராமக் கொடுகடன்(அ) 1979 –1980

| நோக்கம் | மக்கள் வங்கி (ஆ) | | கிராம வங்கிகள் | | இலங்கை வங்கியின் துணை அலுவலகங்கள் (இ) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1979 | 1980 | 1979 | 1980 | 1979 | 1980 | 1979 | 1980 |
| 1. பயிர்ச்செய்கை: | 25.8 | 19.6 | 4.6 | 4.4 | 25.5 | 21.0 | 55.9 | 45.1 |
| 1.1 நெல் ... | (20.5) | (16.0) | (1.0) | (1.1) | (17.7) | (13.5) | (39.2) (ஈ) | (30.7) (ஈ) |
| 1.2 சிறு உணவுப்பயிர்கள் ... | (5.3) | (3.4) | (3.6) | (3.3) | (7.5) | (7.5) | (16.4) | (14.2) |
| 1.3 கரும்பும் பருத்தியும் ... | (—) | ( .2) | (—) | (—) | (0.3) | (—) | (0.3) | (0.2) |
| 2 கால்நடை வளர்ப்பு ... | | | 1.7 | 2.1 | 0.6 | 0.8 | 2.3 | 2.9 |
| 3. சிறு கைத்தொழில் ... | | | 1.4 | 2.1 | 0.9 | 0.4 | 2.3 | 2.5 |
| 4. பொறிகள் கருவிகளின் கொள்வனவு ... | | | — | — | 11.9 | 10.4 | 11.9 | 10.4 |
| 5. கடன் மீட்பு ... | | | 3.7 | 3.9 | — | — | 3.7 | 3.9 |
| 6. நுகர்வு ... | | | 1.0 | 1.1 | 0.5 | 0.6 | 1.5 | 1.7 |
| 7. வீடமைப்பு மின்னூட்டல், நீர்வழங்கல் ... | | | 15.8 | 20.7 | 2.6 | 2.7 | 18.5 | 23.4 |
| 8. வர்த்தகமும், ஏனையனவும் ... | | | 3.4 | 5.0 | 6.6 | 7.0 | 10.0 | 12.0 |
| மொத்தம் | 25.8 | 19.6 | 31.6 | 39.3 | 48.6 | 42.9 | 106.1 | 101.9 |

மூலங்கள்: மக்கள் வங்கி, இலங்கை வங்கி.
வரையறுக்கப்பட்ட அட்டன் நெசனல் வங்கி

(அ) நகை அடவின் கீழ் மேலதிப்பற்றுக்கள் முற்பணங்களைத்தவிர்த்து

(ஆ) அ. உ. கி. கொ. தி. இன்கீழ்

(இ) அ. உ. கி. கொ. தி. இன்கீழ் வழங்கப்பட்ட கடன்கள்.

(ஈ) அ. உ. கி. கொ. தி. இன்கீழ் அட்டன் நெசனல் வங்கியினால் வழங்கப்பட்ட கடன்கள்.

1979 — ரூ. 79 ஆயிரம்

1980 — ரூ. 10 இலட்சம்

## அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீடு

**1971 = 100**

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

விலங்கு வளர்ப்பு, சிறியளவு கைத்தொழில்கள், மூலதனக் கருவிகளைக் கொள்வனவு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கான கடன்வழங்கல் பெரும்பாலும் முன்னைய ஆண்டின் மட்டத்திலேயே மாற்றமின்றி இருந்தது. வீடமைத்தல், மின்னூட்டல், நீர்வழங்கல் போன்றவற்றுக்கு வழங்கப்பட்ட கடன்கள் 1980 ஆம் ஆண்டில் 26 சதவீதத்தால் ரூ. 234 இலட்சங்களுக்கு அதிகரித்தது.

வங்கித்தொழில் நிறுவனங்களின் கிராமக்கடன் வழங்கலில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டது, 1979 ஆம் ஆண்டில் இருந்தும் கடன் வழங்கல் முறையில் கடுமையான ஒழுங்கு முறைகள் வங்கிகளால் பின்பற்றப்பட்டபோதும் கடன்களை மீளப்பெறுவதில் போதுமானளவு முன்னேற்றம் காணப்படவில்லை என்பதனை இங்கு குறிப்பிடவேண்டும். 1967இல் புதியவேளாண்மைக்கொடுகடன் தொடங்கியதிலிருந்து 1980 ஆம் ஆண்டின் சிறுபோகம் முடியும் வரையுள்ள காலப்பகுதியில் நெற் செய்கைக்காக வழங்கப்பட்ட ரூ. 12,090 இலட்சம் கொண்ட மொத்தத்தொகையில் ரூ. 5,790 இலட்சம் மட்டுமே மீளப்பெறப்பட்டுள்ளது. செலுத்தத்தவறியதொகை 52 சதவீதமானதாகும். இத்தொகைகள் கிராமக் கடன் வழங்கல்கள் மீளளிப்புக்களை விரைவுபடுத்துவதற்கான செயல்முறைகள் ஆகியன தொடர்பான அடிப்படைச் சிக்கல்களின் உள்ளார்ந்த தன்மையைக் காட்டுகின்றன.

## கைத்தொழில் [1]

1980ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்றுமதியையொட்டிய கைத்தொழில்களின் விரிவாக்கம், கைத்தொழில்களில் வெளிநாட்டு கூட்டுப்பங்காளர்கள் பெருமளவில் பங்குபற்றியமை, ஆற்றல்குறைந்த கைத்தொழில்கள் இறக்குமதிகளுடன் எதிரீடு செய்யமுடியாது காணப்பட்டமை, சிலவேளைகளில் மிகவும் ஆற்றல் குன்றிய தொழில் நிறுவனங்களை மூடியமை என்பன தயாரிப்புக் கைத்தொழிலில் காணப்பட்ட முதன்மையான பண்புகளாக விளங்கின.

1977ஆம் ஆண்டின் பொருளாதாரச் சீர்திருத்தங்கட்கு முன்பு நிலவிய கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள், வெளிநாட்டுச்செலாவணி ஒதுக்கு, உயர்ந்தளவான வரிகள் போன்றவற்றால் கைத்தொழில்கள் பெருமளவில் பாதுகாக்கப்பட்டன. சில கைத்தொழில்கட்கு மிகவும் கட்டுப்பாடான முறையில் கிடைத்த உதவிகளும் அபிவிருத்திக்கு ஒரு பாதுகாப்பாக அமைவதற்குத் தடையாக இருந்தன. இவ்வாறு தொடர்ச்சியாகவும் வெளிப்படையாகவும் நீண்டகாலம் நிலவிய இத்தகைய கட்டுப்பாடுகள் கைத்தொழில் துறையை ஒரு பின்தங்கிய துறையாக விளங்கச் செய்தன. இக்கட்டுப்பாடுகள் பெரும்பாலும் ஆற்றலற்ற கைத்தொழில்களை முன்னேறாது தடுத்தும், வெளிநாட்டு மூலதனங்கள் உள்வருவதைத் தடுத்தும், பெருங் கைத்தொழில்களில் முதலீடு செய்வதைத் தடுத்தும் வந்தன. பாதுகாப்பான சில வரிகள் வைத்திருக்கப்பட்ட வேளையில் வர்த்தகத்தின்மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதையடுத்து இக்காலப்பகுதியில் சில முயற்சியாளர்கள் குறிப்பாக பெருங் கைத்தொழில் முயற்சியாளர்கள் 1977ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களையடுத்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுடன் போட்டியிடக் கூடியவாறு இயலளவைப் பயன்படுத்தி அவர்களின் உற்பத்திப் பொருட்களின்

---

1. கடந்த காலங்களைப் போன்று தனியார்துறை கைத்தொழில் துறையின் 1980ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் தரவுகள், அரச துறைகளிலிருந்த சிறிய நடுத்தர பெரியதுமாக தெரிந்த தயாரிப்புக் கைத்தொழில்கட்கு மத்திய வங்கியால் அனுப்பி வைக்கப்பட்ட கேள்விக்கொத்துக்களின் கூற்றுகளின் அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. பொதுவாக பதில்கள் மூன்றிலொரு பகுதியினரிடமிருந்து கிடைத்தன. இவைகள் பெரிதும் பெருங்கைத்தொழில்களை அடக்கியிருந்தன. தரவுகள் கிடைக்காத பகுதிகளில் அரச முகவர் நிலையங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைத்த செய்திகளினடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.